[illegible] 1923-24

വാല്യം 14 ലക്കം 7

3L

Rbണm211, M11VD.

M24·14·7.

186738.

961

Regd: No. M. 916.

# THE VEDANTA DIPIKA

# வேதாந்த தீபிகை.

ரக்தாக்ஷி வரு, 1923—1924. ஸம்புடம் 14.

சித்திரை மீ. APRIL. ஸஞ்சிகை 7.

பத்ராதிபர்.
நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பீ.ஏ., பீ.எல்.

கார்யதர்சி.
ஆர். ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார், எம்.ஏ.

விஷய ஸூசிகை.

| | |
|---|---|
| 1. பத்ராதிபரின் குறிப்புகள் | 201 |
| 2. ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயமும் ஸ்ரீபாஷ்யகாரரின் உபகாரமும்.— மஹாவித்வான் பண்டித ரத்நம் ஸ்ரீ. வே. ல. ஸ்ரீநிவாஸாசார்யர். | 209 |
| 3. ஸ்ருதி ப்ராமாண்யம்.— ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைலசக்ரவர்த்தி, பீ. ஏ. | 214 |
| 4. ஆபோபஸ்ருந நிர்ணயம்.— ஸ்ரீ. உ. வே. தி. நடாதூர் நரஸிம்மாசார்யர். | 218 |
| 5. நீதிஸ்லோகங்கள்.— ஸ்ரீ உ. வே. நெடுந்தெரு ஸ்ரீநிவாஸா சார்யர். | 221 |
| 6. ஜீவன்களும் மோக்ஷமும்.— ஸ்ரீ. உ. வே. கிருஷ்ணமா சார்யர். | 222 |
| 7. ப்ராஞ்ஜ்ஞோபாக்யானம்.— | 1 |
| 8. ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை, தமிழ்மொழிபெயர்ப்புடன்.— ஸ்ரீ. உ. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர். | 41 |

K. R. Press, Madras.

வர்ஷச்சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 4.



## ஜெர்மன்

# டிக்-டாக் கடியாரம்

புதியதாகவும், நூதனமாகவும், ஜெர்மன் தேசத்தில் இருந்து வரவழைக்கப்பட்டது. சரியான காலம் காட்டக் கூடியது. மிக்க அழகாயும், மிக்க நேர்த்தியாயும் தயார் செய்யப்பட்டது.

**விலை ரூ 3 தான்.**

இன்றே ஒன்று வரவழைத்துப் பாருங்கள்.

# இது வேண்டுமா?

உயர்ந்த கையில் கட்டும் கடியாரம் தோலுடன் அனுப்பப்படும்.



லீவர் மூவ்மெண்டு கொண்டுள் உழைக்கக்கூடுமான அழகுள்ள கை கடியாரம். செலவு அநேகம் ஆய்விட்டது.

கையில் கட்டுவதற்கு மிக்க அழகாயுள்ளது. விலை தோலுடன் ரூ. 7—8—0

விலாசம்:—வி. எஸ். வாச் கம்பெனி., தபால்பெட்டி 105, மதராஸ்.


---

## விளம்பரம்.

தீபிகைக்கு 'வ்யாஸங்கள்' சந்தா, விலாஸ மாறுதல்கள், இன்னும் தீபிகை விஷயமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய விவரத்துக்கு ஆகும் கடிதங்கள் எல்லாம் ஸபையின் கார்யதரிசிக்கு, 2/11 ஆதியப்ப முதலி தெரு,புரசைவாக்கம்,வேப்பேரி போஸ்டு என்ற விலாஸத்துக்கு அனுப்பவேணும்.

வ்யாஸம் எழுதுகிறவர்கள் விஷயத்தை எளிதான தமிழ் நடையில் எழுதிப் பிரமாணங்களைக் கீழ்க்குறிப்புக்களாக எழுதியனுப்பவேணும். ஸம்ஸ்க்ருத ஶ்லோகங்களுக்கும் வாக்கியங்களுக்கும் கூடவே தமிழ் மொழிபெயர்ப்பு எழுதிவிடவேணும். வ்யாஸங்கள் நேரில் அச்சாபீசுக்கு அனுப்பப்படுவதால் எழுத்துக்களை ஸ்பஷ்டமாகவும் விரளமாகவும் கடுதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதி அனுப்பும்படி பிரார்த்திக்கப்படுகிறது.

மெம்பர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் விலாஸத்துக்கு ஸஞ்சிகைகள் அப்போதைக்கப்போது வெகு ஜாக்ரதையுடன் அனுப்பப்பட்டு வருகின்றன. ஸஞ்சிகைகள் வேண்டிய அளவு தான் அச்சிடப்படுவதால் தபால் மூலமாகவோ, ஸரியான முகவிலாஸம் இல்லாததினாலோ சேராத ஸஞ்சிகைகளுக்கு நாங்கள் உத்தரவாதமாகமாட்டோமென்று விநயத்துடன் தெரிவிக்கிறோம்.

பழைய ஸஞ்சிகைகள் அடங்கிய புஸ்தகங்கள் ஸ்வல்பமாக இருப்பதாலும் தேவை ஜாஸ்தியாக இருப்பதாலும், வேண்டியவர்கள் தாமதமின்றி எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

கார்யதர்சி.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:— டாக்டர் ஸ்ரீநிவாஸாசார்யர், பீ. ஏ., பீ. எல்.

கார்யதர்சி:— ஆர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், எம். ஏ.

ஸம்புடம் 14.] ரக்தாக்ஷி ஞூ, சித்திரை மீ. [ஸஞ்சிகை 7.

“ [illegible]

[illegible]”

ஸ்ரீபாகவதம். 1–9–23.

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

### ஹிந்துமதஸ்தாபன மசோதா.

இந்த மசோதாவானது கனம் சென்னை கவர்னர் அவர்களால் சில மாறுதல்களுடன் சட்ட ஸபைக்கு அனுப்பப்பட்டதும், ஷை ஸபையின் சென்ற கூட்டத்தில் ஜனப்ரதிநிதிகள் அதை வெகுவாய் ஆக்ஷேபித்தும், முடிவாய் ஸர்க்காருடையவும், மந்திரிக் கக்ஷியினருடையவும் பலத்தினால் இம்மசோதா நிறைவேறினதும், மற்றும் இதைப்பற்றிய விவரங்களும் நமது ஆப்தர்களுக்கு ஸமாசாரப் பத்ரிகைகளின் மூலமாய்த் தெரிந்திருக்கும். இந்த ஸஞ்சிகை வெளிவருமுன் அதற்குக் கவர்னருடையவும் ராஜப்ரதிநிதி (Viceroy) யுடையவும் ஸம்மதமும் கிடைத்துவிடலாம்.

இதன் பூர்வ வ்ருத்தாந்தங்களும், ப்ரதான அம்சங்களும் தீபிகையில் ஏற்கெனவே விமர்சிக்கப்பட்டிருக்கின்றனவாகிலும், இத்தருணத்தில் இரண்டொரு அம்சங்களைக் குறிப்பிடவேண்டியது அவச்யமாகிறது. ஆலய ஸம்பந்தமாய் வெகு குறைவுகளைத் திருத்தவேண்டியது காலதாமதத்தைப் பொறுக்



186738

காததேயாகிலும், இம்மசோதாவினால் விளையக்கூடிய அநர்த்தங்களைக் கவனிக்கும்போது, இதனினின்றும் தப்புவதே பெரிய கார்யமென்று யோசிக்க வேண்டியிருக்கின்றது.

தேவாலயங்களைப்பற்றிப் பொதுவாய்ப் பல விபரீத நினைவுகள் பரவி வருவதை நாம் பல முறைகளில் எடுத்துக்காட்டியிருக்கின்றோம். அர்ச்சாவதாரத்தின் தத்வம், பகவத் ஸந்நிதிகளின் நிர்மாணம் ப்ரதிஷ்டை, ப்ரயோஜனம், பகவதாராதன ஸ்வரூபம், பகவதுத்ஸவங்களின் விசேஷம் முதலிய பல விஷயங்கள் பலர்க்குத் தெரியா. ப்ரதிமையாராதனம் என்ற ஒன்று மட்டும்தான் பொதுவாய் எவரும் அறிந்த விஷயம். இவற்றில் விஷ்ணு ஆலயங்கள் பகவத் சாஸ்த்ரங்களை யநுஸரித்து வைதிக ப்ரக்ரியைகளினால் ப்ரதிஷ்டை பூஜை முதலியவைகளைப் பெற்று, முக்கியமாய் வைதிகர்களும் சாஸ்த்ரஜ்ஞர்களுமான ப்ராம்மணர்களின் ஆதிக்யத்துக் குட்பட்டு நிர்வஹிக்கப்பட வேண்டியவை. சிவாலயங்களைப் பற்றி நூதனமாய்ச் சில கக்ஷிகளேற்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று, சிவாலயங்களுக்கும் ப்ராம்மணர்களுக்கும் ஒருவிதமான ஸம்பந்தமும் கிடையாதென்றும், ஆகையால் அவைகளில் பூஜாரிகள் முதற்கொண்டு எவ்வித நிர்வாஹத்திலிருந்தும் ப்ராம்மணர்களை வெளியேற்றி விடவேண்டு மென்றும் சொல்லுவது. அக்கக்ஷிகளை நாம் பராமர்சிக்க உத்தேசமில்லை. இம்மசோதாவின்கீழ் ஏற்படும் கம்மிட்டிகளும் தர்மகர்த்தாக்களும் தங்கள் தங்கள் அதிகாரங்களைச் செலுத்துவதில், ஆலய உள் நிர்வாஹங்களில் பல படிகளில் தலையிட அவகாசமுண்டு. அதனால் சாஸ்த்ர ப்ரக்ரியைகளுக்கு லோபமும் வைதிகர்களின் மேல் அவைதிகர்கள் மத ஸம்பந்தமான ஆதிக்யம் செலுத்துவதும் ஸம்பாவிதமாகும். ஏற்கெனவே கோர்ட்டுத் தீர்ப்புக்களினால் இவ்விபரீதங்கள் சில உண்டாயிருப்பதைப் பலர் அறிவார்கள். அர்ச்சகர்களுக்கு முறை யின்னவிதமென்று கோர்ட்டு டிக்கிரி பரிஷ்கரித்துவிட்டதினால் ஒரு ப்ரதானமான பகவத் ஸந்நிதியில் ஒரு ப்ரும்மோத்ஸவத்தின் மத்தியில் ஒரு அர்ச்சகர் தாம் கட்டியிருந்த கங்கணத்தை யவிழ்த்து அடுத்த முறைக்காரருக்குக் கொடுக்கவேண்டியிருந்ததை ஸ்ரீமான் ராவ்பஹதூர் டி. நம்பெருமாள் செட்டியாரவர்கள் சட்டஸபையில் உதாஹரணமாய் எடுத்துக் காட்டியிருக்கிறுக்கிறார்கள். இவ்விதமான அசாஸ்த்ரீய ஸம்பவங்கள் இனி அநேகம் ஏற்படலாம். இன்னும் அநர்த்தாம்சங்கள் அநேகமுண்டு.

பகவத்ஸந்நிதிகளில் பிழைப்புக்காகப் போகிறவர்களுக்கும் கக்ஷி ப்ரதிகக்ஷிகளில் உத்யுக்தர்களாயும் ஆக்ரஹ க்ரஸ்தர்களாயும் வ்யாபரிக்கும் சிலர்க்கு மட்டும் இப்போது இடமிருக்கின்றதே தவிர, ஸாத்விகர்களான ஸேவார்த்திகளுக்கு ஒருவிதமான செல்வாக்குமில்லை. வைதிக ச்ரேஷ்டர்களில் அநேகர் ஸந்நிதிகளுக்குப் போவதை ப்ரதான கார்யமாக நினைப்பதில்லை. லௌகிகர்களுக்கு மேல் நாட்டு நாகரீகாதிகளின் ஸம்ஸர்க்கத்தினால், பகவத் ஸேவா



திகளைப் பற்றிய வாஸ்தவ ஜ்ஞாநமாவது விச்வாஸமாவது த்ருடமாகக் கிடையாது. வைதிகர் லௌகிகர் உள்படப் பொதுவில் எங்கும் நாஸ்திக்யம் வளரச்செய்தேயும் அஹங்கார மமகார ப்ரயுக்தங்களான சண்டைகளுக்கும் பகவத் பாகவத அபசாரங்களுக்கும் குறைவேயில்லை. சாஸ்த்ர வச்யர்களான பெரியோர்களுடைய மேற்பார்வைக்கு அவகாசமில்லாததினால். 'கோவிற்பூனை தேவர்க்கஞ்சாது' என்கிற கணக்கில் ஆராதனம் முதலிய ஸர்வ வித பகவத் கைங்கர்யங்களிலும் கோவில் கிங்கரர்கள் நிர்ப்பயமாய் யதேச்சையாய் விஹரித்து வருகிறார்கள். இதேமாதிரி கோவில் ஐவேஜுகளைப்பற்றிய நிர்வாஹங்களும் த்ருப்திகரங்களாகக் காணப்படவில்லை. வீண் வ்யாஜ்யங்களுக்குத் தேவாலயங்களின் ஐவேஜுகள் செலவு செய்யப்படுகின்றன. இவ்விதமான நிலைமைக்கு முக்கிய காரணம், நமது ஸமூஹத்தில் ஐகமத்யம், பொது நன்மையைக் கருதிய அபிமானம், மத விச்வாஸம் முதலியவைகள் குன்றிவிட்டதே தான். தேவாலயங்கள் சரிவர நிர்வஹிக்கப்படவில்லையென்றும், வெகுத்ரவ்யங்கள் வீணாக்கப்படுகின்றனவென்றும், அவைகளைப் பொது நன்மைக்காக உபயோகப்படுத்துவதே ந்யாயமென்றும் இப்படிகளில் காலக்ரமத்தில் பொதுவாய் அபிப்ராயங்கள் வளர்ந்துவரவே; இராஜரீக முறைகளின் மாறுபாடுகளினால் மந்திரிக் கக்ஷியாருக்கு அதிகாரம் கிடைத்த இத்தருணத்தில், தேவாலயங்களைப் பற்ற அவர்கள் சட்டம் செய்ய ஆரம்பித்தது ஒரு ஆச்சரியமுமல்ல. ப்ராம்மண த்வேஷத்தை முன்னிட்டு உண்டான அக்கக்ஷியார் பஹுஜந அபிப்ராயங்களுக்கு விரோதமாய்ப் பிறர் அபிப்ராயங்களைக்கொஞ்சமேனும் சட்டை செய்யாமல், பல கெடுதல்களான அம்சங்களிருக்கச் செய்தேயும், இந்த மசோதாவைப் பிடிவாதமாய் நிறைவேற்றியது தான் இதில்மிகவும் ஆக்ஷேபிக்கத்தக்க விஷயம். தவறுதலுண்டானால் பின்னர்த் திருத்திவிடுவார்களாம்! இவ்வளவு காலம் பொறுத்தவர்கள் ஏன் இன்னும் சிறிது தாமதத்துக்கிசைந்து மசோதாவை த்ருப்திகரமாக வமைக்கக்கூடாதோ தெரியவில்லை!

மடநிர்வாஹ விஷயத்தில் இம்மசோதா செய்திருக்கும் நிபந்தனைகள் மதாபிமானிகள் எவர்களுக்கும் மிகுந்த வருத்தத்தை யுண்டுபண்ணு மென்னத் தட்டில்லை. கவர்னர் சிபார்சு செய்த மாறுதல்களினால் மடாதிபதிகளின் நிலைமை அதிகமான கவலைக்கு இடமாய்விட்டது. இனி ஏற்படப்போகிற ஸென்ட்ரல் போர்டார் (The central Board,) மடங்களுக்கு ஸ்கீம்களை ஏற்படுத்துவதிலோ மாற்றுவதிலோ ரத்துசெய்வதிலோ (settlement, alteration and cancellation of schemes), தேவாலயங்களின்பேரில் செலுத்தும் அதிகாரங்கள் யாவற்றையும் செலுத்தலாம். மடாதிபதிகளுக்கு அதில் அதிருப்தியுண்டானால் அவர்கள் தான் கோர்ட்டில் வழக்குத் தொடரவேண்டும். மற்றப்படி போர்டாருடைய உத்திரவே முடிவானது. மடங்களுக்குட்பட்ட தேவ

ஸ்தானங்கள் மடாதிபதிகளின் ஆதிக்யத்தைவிட்டு வெளிப்படுத்திவிடப் பட்டன வென்றே சொல்லிவிடலாம். மடங்களுடைய வரும்படிகளில், மடஸம்பந்தமான வகையறுக்களின் செலவுக்காக இவ்வளவே போதுமானதென்றும், இவ்வளவு மிகுதியானது (surplus) என்றும் நிர்ணயிக்கும் அதிகாரம்போர்டாருடையது. அவர்களே அந்த மிகுந்த வருமானத்தை எந்தத் துறையில் செலவுசெய்யலாமென்று தீர்மானிக்கவேண்டியவர்கள். அப்படித்தீர்மானிக்கப்படும் விஷயம் மடத்தின் பொதுவான நோக்கத்துக்கு விரோதமா யிருக்கக்கூடாது என்ற ஒருநிபந்தனைதான் உண்டு. இந்த விநியோகத்துக்கு ஆக்ஷேபணை சொல்லுகிறவர்கள் வ்யாஜ்யம்செய்து கொள்ளலாமாம்!

இது தவிர, மடாதிபதிகளே கையொப்பமிட்டு உறுதிமொழியுடன் ப்ரதிவர்ஷமும் வரவு செலவு கணக்குகளை போர்டாருக்கு அனுப்பி அவர்களுடைய அங்கீகாரத்தைப் பெறவேண்டு மென்றும், போர்டார் ஸம்மதித்த திட்டப் (budget) படியே தான் மடாதிபதிகள் செலவுகளைச் செய்யலா மென்றும் போர்டாரபிப்ராயத்தில் மடநிர்வாஹத்தில் த்ருப்திகரமாகவில்லை யென்று தீர்மானிக்கப்பட்ட மடாதிபதியைப் போர்டார் பண ஸம்பந்தமான நிர்வாஹத்திலிருந்து நீக்கி வேறு ஒருவரை நியமித்து விடலாமென்றும், மடங்களின் மொத்த வரும்படி (gross in come)யில் ரூ 100 க்கு $1\frac{1}{2}$ வீதம் போர்டுக்கு வரி கொடுத்து விடவேண்டுமென்றும், இன்னும் பலவிதமாயுமுள்ள நிபந்தனைகள் மசோதாவில் ஏற்பட்டிருப்பது ஏற்கெனவே தெரிந்த விஷயம்.

பகவானைப்போல நாம் பாவிக்கும் ஆசார்ய ஸ்தானீயர்களான மடாதிபதிகளுக்கு இவ்விதமான பரிபவ நிலைமை வந்ததற்குக் காரணமென்ன? அதை இதுவரையில் கவனியாதது எவர் குற்றம்? இதற்கு ஏதாவது பரிஹாரமுண்டா? என்றிவைபோன்ற ப்ரச்நங்கள் ஆஸ்திகர்களுக்கு ஜநித்து மிகவும் துக்காவஹங்களாயிருக்கின்றன. இதற்கெல்லாம் சுருக்கமான உத்தரமென்னவென்றால், திருமந்திரத்தில் உபதேசிக்கப்பட்ட ஸ்வரூப சிக்ஷை ஒரு இடத்திலும் நடவடிக்கைகளில் ப்ரதிபலிக்காமலிருப்பதும், அதன் காரணமாக ஏற்பட்ட பகவந் நிக்ரஹ ஸங்கல்பமும் தான் என்னத் தட்டில்லை. 'நான் பகவானுக்கே யன்றி எனக்கும் ஒருவனுக்கும் உரியேனல்லேன்; ஒன்றையும் பற்ற நிருபாதிக சேஷியுமல்லேன்' ஒன்றுபதேசிக்கப்பட்டபடியே குரு சிஷ்ய ப்ரபஞ்சங்களில் அஹந்தா மமதா த்யாகங்கள் உண்மையாக நடையாடிவந்தால் நமது மதஸ்தாபநங்களிடத்தில் அந்யர் அணுக முடியுமா? 'சிஷ்யனுடைய ஆத்ம யாத்ரை ஆசார்யாதீனம்; ஆசார்யன் தேஹ யாத்ரை சிஷ்யாதீனம்', என்னும் தர்மத்தை மடாதிபதிகளும் சிஷ்யர்களும் முறையே எம்மட்டில் அநுஷ்டிக்கிறார்கள்? ப்ரஸ்தாப மசோதாவை ஒவ்வொரு மதத்தாரும் தங்கள் தங்கள் மடங்களைப் பற்றவாவது போதுமான அளவில் கண்டித்து ஒழிக்க முன் வந்தார்களா? அந்தந்த மடாதிபதிகளும் தமது சிஷ்ய



ஸமூஹங்களை அரவணைத்து இம்மாதிரியான ஸந்தர்ப்பங்களில் அவர்கள் குருபீடங்களுக்காக எவ்வித த்யாகத்தையும் செய்யும்படியான ப்ரீதி தம்மிடம் வரும்படி நடந்து கொண்டு வந்திருக்கிறார்களா? மட மென்றா லென்ன? குரு சிஷ்ய ஸம்பந்தம் எத்தகையது? குருவுக்கு ஸமர்ப்பணம் செய்யப்பட்ட த்ரவ்யம் எப்படியாகிறது? குருவினால் சிஷ்யன் பெறும் ப்ரயோஜநம் என்ன? என்பது முதலிய விஷயங்களொன்றையும் ஸாமாந்யமாய் ஜநங்கள் அறியார்கள். இந்த மசோதாவில் மடம் என்பதற்குச் சொல்லியிருக்கும் லக்ஷணமே (definition) இவ்வறியாமையை விளக்குகின்றது. மடாதிபதிகள் பொதுவாய், 'ஐ०வதி வா०வஶாயா: ஶிஷ்யாஞ கூ்க்ஷிஂஹரொ:' என்ற கணக்கில் சிஷ்யர்களிடத்தில் பணத்தைப் பிடுங்கித்தாமும் தம்மைச் சேர்ந்தவர்களுமாக வயிறு வளர்ப்பவர்கள்; பூர்வர்கள் சிஷ்யவர்க்கங்களுடைய ஆத்மோஜ்ஜீவன க்ருத்யங்களுக்காக ஆர்ஜ்ஜித்து வைத்த ஏராளமான த்ரவ்யங்களை அஸத் விநியோகம் செய்பவர்கள்; என்ற மாதிரியான அபிப்ராயங்கள் நெடுநாளாய்க் கனிந்து இச்சமயத்தில் இந்தச் சட்டமாகப் பரிணமித்தன. மடாதிபதிகளும் காலத்தை யநுஸரித்துத் தமது ப்ரவ்ருத்திகளை நடத்துவதில்லை. மடாதிபதிகளின் ப்ரபஞ்சம் முழுவதும், தம்மையும் தம்மைச் சுற்றியிருப்பவர்களையும் தற்காலம் தம் கையிலகப்பட்ட பொருள்களைப் பற்றவும் பர்யாப்தமாகிவிடுகிறது. தமது ஸமூஹம், தமது நாடு, தாம் உட்பட்டிருக்கும் ராஜாங்கம், நாட்டில் மதவிஷயமாயும் ராஜரீக விஷயமாகவும் நடந்துவரும் குழப்பங்கள், தமது சிஷ்யாதிகளுக்கே தம்மளவிலுள்ள மனோபாவம், இத்தகைய காரணங்களினால் தமது ஸ்தாநத்துக்கும் செல்வாக்குக்கும் ஆத்யந்திகமாக நேரிடக்கூடிய ஹிதாஹிதங்கள் இத்யாதிகளை எவரும் கவனித்து வருவதாகக் காணப்படவில்லை. மடநிர்வாஹங்களை ஏற்றுக்கொள்ளும் ஸந்யாஸிகள் லோக சரித்ரத்தையும் போக்கையும் கவனிக்காமலிருக்க முடியாது.

தற்காலம் வடதேசத்தில் ஸீக்கியர்களுக்குள் அகாலிகள் என்னப்பட்ட கக்ஷியார் செய்துவரும் ப்ரவ்ருத்திகளை நம்மடாதிபதிகள் அறிவார்களா? அகாலிகள் என்றால் காலத்துக்கு ப்ரபுவான ஸர்வேச்வரனிடத்தில் ந்யஸ்தபரர்கள் என்றர்த்தம். அவர்கள் 'ஸத் ஸ்ரீ அகால்' என்று மந்த்ர ஜபம் செய்வார்கள். 'ஸ்ரீமானான ஈச்வரன் ஒருவனே ஸத்யம்' என்று இதற்கு அர்த்தம். ஸீக்கியர்களுக்குள் அநேக மடங்களும் தேவாலயங்களும் உண்டு. அவற்றின் அதிபதிகளுக்கு மஹந்துக்கள் என்று பெயர். மஹந்துக்கள் மடாலயங்களுடைய ஏராளமான ஐச்வர்யங்களை ஸ்வேச்சா விநியோகம் செய்து கொண்டு சிஷ்யவர்க்கங்களுடைய அபிப்ராயங்களைத் திரஸ்கரித்தே வந்தார்கள். ஜநங்களுக்குள் நாளடைவில் அத்ருப்தி மிகுந்து, இம்மஹந்துக்களை எப்படியாவது வெளியேற்றி மடங்களைச் சீர்திருத்த வேண்டு மென்னும்

எண்ணம் மிகுந்துவிட்டது. அதற்காக ஸத்யாக்ரஹம் என்னும் வ்ரதத்தைக் கொண்டார்கள். அதாவது ப்ராணபர்யந்தமான அபாயம் வந்தாலும் கூடத் தாம் ஆரம்பித்த நற்கார்யத்தில் பிடிவாதம் குறையாமலிருத்தல். இப்படிப்பட்ட தீர்மானத்துடன் நிராயுதர்களாயும் தமக்குப் பிறர் செய்யும் துன்பங்களை எதிர்க்காமலும் குருத்வாரத்தில் திரளாகப் புக ஆரம்பித்தார்கள். மஹந்துவும் தற்காப்புச் செய்துகொள்ளும் முறையில் இவர்களைத் தடுக்க ஆள்கள், துப்பாக்கி, மண் எண்ணெய் முதலியவைகளைத் தயார் செய்து கொண்டு வந்து அகாலிகளைத் தடுத்துப் பலர்க்கு உயிர்ச்சேதமும் விளைவித்தார். அவ்வளவையும் ஸஹித்துக்கொண்டு அகாலிகள் தங்கள் முயற்சியில் தளர்வற்றவர்களாயிருந்தார்கள். முடிவில் ஷை மஹந்துவும் இன்னும் சிலரும் கொலைக்குற்றத்துக்காக ந்யாயஸ்தலங்களில் விசாரிக்கப்பட்டார்கள். மேல் விவரங்களையெல்லாம் ஸமாசாரப் பத்ரிகைகளில் நமது நண்பர்கள் படித்திருப்பார்கள். இந்த ஸம்பவத்துக்குப் பிறகு வேறு அநேக மஹந்துக்கள் தங்கள் தங்கள் மடங்களில் சிஷ்யவர்க்கங்களை ஆவர்ஜ்ஜநம் பண்ணவும், அவர்கள் அபிப்ராயங்களுக்குச் செவிகொடுக்கவும் துவக்கி விட்டார்களென்றும் அறிகிறோம்.

தென்தேசத்து மடங்களில் சைவஸித்தாந்த மடங்களின் நிர்வாஹ விஷயத்தில் சைவர்களான ப்ராம்மண இதரர்களுக்கு நெடுங்காலமாய் அதிருப்தியிருக்கிறதென்று தெரியவருகிறது. ஆங்கிலப் படிப்பில் மிகுந்தவர்களில் அநேகர் இப்போது மசோதாவிலிருக்கும் நிர்ப்பந்தங்கள் போதாவென்கிறார்கள்; தனிப்பட்ட மடங்களுக்கு மட்டும் ஒருசட்டம் செய்யமுடியாதாகையால் ப்ராம்மண மடங்களையும் சேர்த்தோமென்று மந்திரிக் கக்ஷியில் சிலர் சொல்லுகிறார்கள். ப்ராம்மணர்க்குள்ளும் மடநிர்வாஹங்களில் பரிஷ்காரங்களனேகங்கள் ஆவச்யகமென்னும் நினைவுண்டு. சில வர்ஷங்களுக்குமுன் 'ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யஸபை' ஏற்பட்டதே இதற்கு அடையாளம். அந்த ஸபையார் சிஷ்ய தர்மத்தில் ஒருகுறைவுமின்றியே, ப்ரார்த்தனையை முன்னிட்டுக் கைங்கர்ய புத்தியாலே மடத்தின் முன்னேற்றத்துக்காக ஸ்ரீஸ்வாமியுடன் ஒத்துழைப்பதாக முன்வந்தார்கள். இந்த ப்ரயத்நம் பலித்து ஷை குரு சிஷ்யர்களுக்குள் ஒரு ஐகமத்யமும் பரஸ்பர ஹிதாந்வேஷண சித்தவ்ருத்தியும் த்ருடமாக்கப்பட்டிருந்தால், இந்தமடத்தை இந்த மசோதா தானே விலக்கியிருக்கக்கூடும்! இப்படியே மற்ற ப்ராம்மண மடங்களளவிலும் ஜநாபிப்ராயங்களைப் பலவாறாக நாம்கேட்டிருக்கின்றோம்.

மடங்களில் சோம்பரான ப்ராம்மணரின் போஜநம் தவிர வேறு ஒரு நலத்தையும் கண்டிலோமென்பது வெகு ஸாதாரணமான வதந்தி. ஒரு மடத்து ஸ்வாமி ப்ராம்மண போஜனத்தின் காரணமாகப்பட்ட கடன் அவர் பின் பட்டத்துக்கு வந்தவரைக் கட்டுப்படுத்தாதென்று சென்னை ஹைகோர்ட்



டில் தீர்மானமாயிருப்பதைச் சில மாதங்களுக்கு முன் தீபிகையில் குறிப்பிட்டோம்! மதப்ரவசநம் பண்ணுதல், பூர்வ க்ரந்தங்களை லோபமடையாமல் சேகரித்து ப்ரசுரித்தல், சிஷ்யவர்க்கங்கள் நிரம்பியுள்ள ஸ்தலங்களில் ஸ்வஸம்ப்ரதாய போதகங்களான பாடசாலைகளை நிர்மாணம் செய்தல், பலவிடங்களிலுள்ள மடஸொத்துக்களை அந்யாக்ராந்தமாகாமற் பரிபாலித்தல், த்ரவ்யார்ஜ்ஜநம் மட்டில்லாமல் சிஷ்யவர்க்கங்களுடைய அப்யுதயச்ரேயஸ்ஸுக்களுக்காக அவச்யமான ஸாதநங்களையுண்டாக்குதல் முதலியவைகளில் மடாதிபதிகளின் ப்ரயத்நங்கள் மிகவும் குறைவாயிருப்பதே மடங்களைச் சட்டத்துக்குட்படுத்தவேண்டுமென்போருக்குப் போதுமான ஸமாதானமாயிருக்கிறது.

இப்படி நெடுங்காலமாய் மடாலயங்களைப் பற்ற உண்டாயிருக்கும் அபவாதங்களின் பலனைத் தலைவலிபோய்த் திருகுவலி வந்த கணக்கில் வந்திருக்கும். இம்மசோதா ஒழியவேண்டுமானால், மடங்களும் ஆலயங்களும் ந்யாயமான ஒரு ஒழுங்கில் கட்டுப்பட ஸம்மதிக்கவேண்டும்; அவைகளின் முன்னேற்றத்தைப்பற்ற அந்தந்த ஸமூஹத்தாரில் ஒவ்வொருவருக்கும் ஸ்வார்த்தபரதையில்லாத உண்மையான அபிமானம் உண்டாகவேண்டும்; எல்லாவற்றுக்கும் முதற்காரணமான ஆஸ்திக்யமும் ஐகமத்யமும் வ்ருத்தியாகவேண்டும். இதற்குப் பொறுப்பாளிகள், முக்யமாய் ஆசார்யஸ்தாநங்களை வஹிக்கும் மடாதிபதிகள். இனியாவது அவர்கள் பலவிடங்களிலிருக்கும் சிஷ்யவர்க்கங்களைக்கூட்டி ஆலோசனை செய்து பரஸ்பர ஹிதைஷிகளாய் மட பரிபாலன விஷயமான வ்யவஸ்தைகளைத் தமக்குள் ஏகோபித்து த்ருப்திகரமாக ஏற்பாடு செய்துகொண்டால் இம்மாதிரியான மசோதாக்களிலிருந்து தப்பித்துக்கொண்டு, மடாதிபதிகள் தங்களுடைய கௌரவமும் செல்வாக்கும் எப்போதும்போல் சிறப்பாகவே நடக்கக் காண்பார்கள் என்பது நமது துணிவு. இதுதான் இப்போது நேர்ந்திருக்கும் விபத்துக்கு ஆத்யந்திகமான பரிஹாரம். தாத்காலிகமாகத் தேடவேண்டிய பரிஹாரங்களும் சிலவுண்டு. இதுவரையில் செய்திருக்கவேண்டிய தாத்காலிக சிகித்ஸைகளை மடாதிபதிகள் சரிவர நடத்தியிருந்தால் இந்த மசோதா நிறைவேறியிருந்தாலும் அதன் பாதகாம்சங்கள் பல அடிபட்டுப்போயிருக்கும். அதற்கு ராஜப்ரதிநிதியின் அங்கீகாரம் கிடைத்துவிடுமுன், அவரிடம் முறையிட்டுக்கொள்வது ஒரு ப்ரதான தாத்காலிக சிசித்ஸை. மடாதிபதிகளெல்லாம் ஏகோபித்து மடஸம்ரக்ஷணஸமாஜமொன்றை ஏற்படுத்தித் தங்களுடைய நிரந்தரமான ரக்ஷணத்தை அதன்மூலமாக நிலைநிறுத்திக் கொண்டு வரவேண்டும். இதற்காகக் காலதாமதமின்றி ஒருஸ்தாபநத்தை யுண்டாக்கவேண்டிய தவச்யம். இதில் செலவாகும் பணம் மிகவும் ப்ரயோஜநகரமானது. இப்போது தப்பினாலும் கூட, மடாதிபதிகளுக்கு இனி யதேச்சாதிகாரமென்பது நெடுநாள் நடக்காது என்பது ஸித்தம். சென்ற சில வர்ஷங்களாக ஐரோப்பாவில் யதேச்சாதிகாரிகள் என்று நினைத்துக் கொண்

டிருந்த எவ்வளவு அரசர்கள் தமது பதவிகளை யிழந்து, ‘க்ஷயமேஷாம் நராயிவாநு’ என்றபடியே அவர்கள் ராஜ்யமாண்டது வெறும் கதையாய் விட்டது! உலகத்திலுள்ள மஹம்மதியர்களுக்கெல்லாம் குரு ஸ்தானமாய் ஏகாதிபதியென்றும் ஸாக்ஷாத் மஹம்மதுவினுடைய வம்சபரம்பரையினரென்றும் பெயர் பெற்று விளங்கிய கலிபா வானவர் (Kalifa) துருக்கியில் ஜநக்கக்ஷியினரின் முன் தன் ஸ்தாநத்தையிழந்த வ்ருத்தாந்தத்தைச் சில தினங்களுக்குமுன்னே தானேபடித்தோம்! திருவாங்கூர் ராஜ்யத்தில் வைக்கமென்னுமிடத்தில் கோவிலைச்சுற்றியிருக்கும் வீதிகளில் தீண்டாச்சாதியார் ஸத்யாக்ரஹ வ்ரதம் பூண்டு முதன் முதலாக நுழைய எத்தனைப்படுவதையும் கேட்கிறோம்! இப்படிக் காலகதியிருப்பதால் மடாதிபதிகளும் தம்மட்டில் தாம் ஏதோ பந்தோபஸ்தாயிருப்பதாய் நினைத்துவிடக்கூடாது. ‘ஸங்கே ஶக்தி: கலௌ யுகே’ (கலியுகத்தில் ஸங்கத்தினால் சக்தியேற்படுகிறது) என்னும் ந்யாயம் நாளுக்கு நாள் த்ருடப்படுகிறதைக் காணலாம். ஸங்கமாய்ச் சேராத ஸமூஹத்தார் பலபடிகளில் அழிவார்கள் என்பது நிச்சயம்.

இந்த ஸங்கத்தின் மூலமாக எப்போதும் தங்களுடைய ஹிதங்களை மடங்கள் தேடிக்கொள்ளலாம். முதன் முதலாக இடைவிடாத ப்ரசாரவேலையை எங்கும் நடத்தி அந்தந்த ஸ்தலங்களிலிருந்து சட்ட ஸபைக்குத்தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களிடம் வாக்குவாங்கி இந்தச் சட்டத்தை ஒழிக்க (Repeal) வேறு ஒரு மசோதா கொண்டு வரும்படி செய்யலாம். தங்கள் அக்கரைகளைக் காப்பாற்றத் தம் ப்ரதிநிதியொருவரையாவது சென்னை ஸபைக்கும் டில்லி ஸபைக்கும் முறையே தெரிந்தெடுத்தனுப்ப அநுமதிகேட்கலாம். கோர்ட்டு மூலமாய்த் தற்காப்புச் செய்துகொள்ளும் முறைகளை இதன்மூலமாய் நாடலாம். சுருங்கச் சொல்லில் மடங்களுடைய சாச்வத ஸம்ரக்ஷணத்துக்கு இது ஒரு அத்விதீயமான ஆயுதமாகுமென்பது திண்ணம்.

மடநிர்வாஹ ஸ்தாநத்துக்குள்ள கௌரவத்தில் பரிவினால் நாமிவ்வளவு தூரம் எழுதப்புகுந்தோம். இதனால் அவைகளை வஹிக்கும் பெரியோர்களிடத்தில் சிறிதும் நாம் அபசாரப்பட நினைக்கவில்லையென்பதை ஸவிநயமாக விஜ்ஞாபித்துக் கொள்கிறோம்.

---

## அபிப்ராயபேதங்கள்.

பத்ரிகை மூலமாக விவாதப்பட்ட விஷயங்களைச் சர்ச்சை செய்வது, ஐரோப்பியரிடமிருந்து நாம் கைக்கொண்ட ஸம்ப்ரதாயம். ஒருவிஷயத்தைப் பற்றிய அபிப்ராய பேதங்களெல்லாவற்றிற்கும் தடஸ்தமான எந்தப் பத்ரிகையும் இடம் கொடுக்கவேண்டுமென்பது அதில் ஓர் ப்ரதான அம்சம். அப்படி இடம் கொடுப்பதினாலேயே எந்தவித அபிப்ராயத்தையாவது பத்ரி



கையின் நிர்வாஹகர்கள் அங்கீகரித்ததாக ஏற்படாது. பத்ரிகையில் ப்ரசுரித்துவிட்ட மாத்திரத்தினாலேயே ஒருவருடைய அபிப்ராயம் ஸித்தாந்தமாய்விட்டதென்றாவது, பொதுவாய் ப்ரமாணமாகப் பரிக்ரஹிக்கப்பட்டதென்றாவது ஆகாது. நாநாவிதங்களான பராமர்சங்களைப் பத்ரிகையை வாசிப்போர்க்குத் திரட்டிக்காட்டுவது தான் அதன் பலன். அவைகளிலுள்ள ஸாராஸாரங்களைத் தமது உணர்ச்சிகளுக்கேற்ப ஆக்ஷேபிக்கவோ அநுமோதிக்கவோ எவர்க்கும் அவகாசமுண்டு. எந்தவித அபிப்ராயத்தையாவது சிலர் இசையாததை யிட்டுப் பத்ரிகையில் ப்ரசுரிக்காமலிருக்கவொண்ணாது. அப்படிச்செய்வது ப்ரஸித்த பத்திரிகைகளின் ஸம்ப்ரதாயத்துக்கு விருத்தமென்று கருதப்படும்.

இந்த ஸம்ப்ரதாயத்தை நமது தீபிகையும் அநுஸரித்து வருகிறது. இதில் ப்ரசுரிக்கப்படும் சில வ்யாஸங்களைப் பற்றிய ஸம்வாதங்கள் நமக்கு எட்டியிருக்கின்றன. கீழ்ச்சொல்லியதே அவற்றிற்கு ஸமாதானம். நம்மைச்சுற்றிலும் நடக்கும் ப்ரபஞ்ச வ்ருத்தாந்தங்களை நிமிர்ந்து பார்க்காமல் ‘கூபகூர்ம’ (கிணற்றுஆமை) ந்யாயத்தில் நம்மையே பார்த்துக்கொண்டு ரமிக்கும் காலம் போய்விட்டது. நமதுஸமூஹமும் ஸமூஹதர்மமும் வெளிவேஷம் மட்டிலல்லாமல் உண்மையான ஜீவகருணையுடன் இருக்கவேண்டுமென்று ஆசாஸிப்பவர்கள் ஸ்வரக்ஷணைத்துக்காகப் பிறர் அபிப்ராயங்களைத் தாராளமாகச் சொல்லக் கேட்கவேண்டியது இன்றியமையாததென்பதை நம்மாலியன்றமட்டில் வற்புறுத்தத் துணிந்தோம்.

ஸ்ரீ:

## ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயமும் ஸ்ரீபாஷ்யகாரரின் உபகாரமும்.

(மஹாவித்வான் பண்டித ரத்நம் ஸ்ரீ. உ. வே. ஸ. ஸ்ரீநிவாஸாசார்யர்.)

(முன் தொடர்ச்சி)

### 7. சாஸ்த்ரம் ஏகமென்பதற்கு மூலம்.

வேதத்தின் இரண்டு பாகங்களும் சேர்ந்து ஓரே சாஸ்த்ரம் என்ற நமது ஸம்ப்ரதாயத்துக்கு மூலம் எதுவென்றால், ஸாத்வத ஸம்ப்ரதாயமென்றும், பாகவத ஸம்ப்ரதாயமென்றும், பக்தி ஸம்ப்ரதாயமென்றும் ப்ரஸித்தமான ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ப்ரதாயமேதான். ‘பஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயண: ஸ்வயம்’ என்று பாஞ்சராத்ர சாஸ்த்ரம் முழுவதுக்கும் ஸ்ரீமந்நாராயணன் தானே ப்ரவர்த்தகனானால், ‘ஹம்ஸமத்ஸ்ய, ஹயக்ரீவ, நரநாராயண, கீதாசார்யாதி அவதாரங்களால் தானே

வெளி நின்று' என்றருளிச்செய்யப்பட்டதைப்போல், அவதார ரூபமாய் ஸ்ரீமந்நாராயணன் சாஸ்த்ர ப்ரவர்த்தகரா யிருக்கவேண்டும். நாரதாதிகளுக்குபதேசம் பண்ணியிருக்கும் வ்ருத்தாந்தங்களைப் பராமர்சித்தால் இது அஸம்பாவிதமென்று சங்கைக்க வராது. மஹாபாரதத்தில் நாராயணீயத்தில் (அத். 358.) 'ஸமுபோடேஷ்வநீகேஷு குருபாண்டவயோர் ம்ருதே । அர்ஜுநே விமநஸ்கே ச கீதா பகவதா ஸ்வயம் ॥ ............ கதிதோ ஹரிகீதாஸு ஸமாஸவிதிகல்பித: ॥ (கௌரவர்களுடையவும் பாண்டவர்களுடையவும் யுத்தத்தில் சேனைகள் யுத்த ஸந்நத்தரான அளவில் அர்ஜுனன் மனதில் மாறுபாடடைந்தபோது பகவான் தன்னாலேயே இந்தத் தர்மம் சொல்லப்பட்டது..................இந்தத் தர்மம் சுருக்கமாகவும் ஒன்று சேர்க்கப்பட்டதாயும் பகவானுடைய பல உபதேசங்களில் சொல்லப்பட்டது). இத்யாதி வாக்யங்களைப் பார்த்தால் பகவானுடைய சாஸ்த்ர ப்ரவர்த்தகத்வமும் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகத்வமும் ஸ்பஷ்டமாகின்றன.

இப்படி ஸர்வேச்வரன் க்ருஷ்ணாவதாரத்தில் ஸாத்வத (பாகவத) ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகனும், தன்னும்ப்ரதாயான ஸங்கர்ஷணனும் (பலராமனும்) புத்ர பௌத்ரர்களான ப்ரத்யும்ந அநிருத்தர்களும் பரம்பரையாக ஸம்ப்ரதாய ப்ரவர்த்தக ஆசார்ய பீடாதிபதிகளாயிருந்தார்கள் என்று நிர்ணயிக்கலாம். 'ஸாத்வதம் விதிமாஸ்தாய கீத: ஸங்கர்ஷணேந ய: ॥ த்வாபரஸ்ய யுகஸ்யாந்தே ஆதௌ கலியுகஸ்ய ச ॥' (த்வாபரயுகத்தின் கடைசியிலும் கலியுகத்தின் ஆரம்பத்திலும் ஸாத்வத விதியை யநுஸரித்து ஸங்கர்ஷணனால் யாதொன்று உபதேசிக்கப்பட்டதோ) என்பது முதலான ப்ரமாணங்களினால் ஸங்கர்ஷணர் ஸ்ரீஸாத்வத ஸம்ஹிதா சாஸ்த்ர கர்த்தாவாக விருந்தாரென்று ஸ்பஷ்டமாகிறது. ப்ரத்யும்ந அநிருத்த ஸம்ஹிதைகளும் ப்ரகாசமாகவே யிருக்கின்றன. இவர்கள் இதிஹாசரித்ர கடத்தை மட்டுமல்லாமல் ஆசார்ய க்ருத்யத்தையும் செய்து வந்தார்கள் என்று தெரியவருகிறது.

## 8. தேவதாகாண்டம்.

பூர்வ மீமாம்ஸையின் பின்பாகமாகிய தேவதாகாண்டத்தை இந்த ஸம்ப்ரதாயத்தை அநுஸரித்துத்தான் ஸங்கர்ஷ காண்டம் அல்லது தைவீ மீமாம்ஸை என்கிறது. இது காசக்ருத்ஸ்நரால் நிர்மாணம் செய்யப்பட்டு ஜைமினியால் ப்ரசுரம் செய்யப்பட்டு, அதனால் பூர்வ மீமாம்ஸையையும் (கர்ம காண்டம்) உத்தர மீமாம்ஸையையும், (ஜ்ஞானகாண்டம்), ஒரு சாஸ்த்ரமாக நிரூபணம் செய்தது. அதாவது, 'விக்ரஹோ ஹவிஷாம் போகம் [illegible] ஸாந்நித்யம் த்ருப்தி: ஹவ்யப்ரதாநம் ச தேவதாநாம் ந வித்யதே ॥'



(தேவதைகளுக்குச் சரீரமாவது, ஆஹுதி செய்யும் ஹவிஸ்ஸுகளைப்பெற்றுக் கொள்ளும் சக்தியாவது, ஒரே காலத்தில் கர்மங்கள் செய்யப்படும் இடங்களிலெல்லாம் ஸாந்நித்யம் பண்ணும் யோக்யதையாவது, ஹோமத்தால் த்ருப்தியடைவதாவது, பலங்கொடுக்கும் தன்மையாவது கிடையாது) என்று அசேதந தேவதா வாதம் முற்காலத்தில் ப்ரபலமாயிருந்தது. இந்த ஸித்தாந்தத்தின் பரீவாஹந்தான் ப்ரதிமா தேவதா வாதம். அதுதான் ப்ரஸித்தமாய் லோகாயத மதமாயிற்று. இதையெல்லாம் நிரஸித்து ஸ சேதந ஸாமர்த்ய ஸஹித தேவதா நிர்ணயத்துக்காகவும் (தேவதைகள் சைதன்யமுடையவர்கள், பலங்கொடுக்கக்கூடியவர்கள், சக்தியுடையவர்கள் என்று நிர்ணயிக்கவும்) ஸர்வஜ்ஞனாய் ஸர்வ சக்தனாய்ப் பரமகாருணிகனாயிருக்கும் பரதேவதையை நிர்ணயிப்பதற்காகவும் இந்தத் தேவதாகாண்டம் ப்ரவ்ருத்தமாயிற்று. 'ஸ்வரூபம் ப்ரதமே [illegible] ததுபாஸநம் ததுபலம் ச தைவதா காண்டே தேவதாநாம் [illegible] ॥' (தேவதா காண்டத்தில் முதலில் தேவதைகளுடைய ஸ்வரூபம், அவர்களுடைய பேதம், அவர்களுடைய உபாஸநம், அதன் பலம் ஆகிய இவையெல்லாம் சொல்லப்படுகின்றன) என்கிற ப்ரமேயமுள்ள தேவதாகாண்டத்தில், 'அந்தே ஹரௌ தத்தர்சநாத், ஸ விஷ்ணுராஹ ஹி, தம் ப்ரஹ்மேத்யாசக்ஷதே தம் ப்ரஹ்மேத்யாசக்ஷதே' (முடிவில் இவ்வாராதனங்களெல்லாம் ஹரியினிடத்தில் சேர்கின்றன. அவனே விஷ்ணு என்றல்லவோ ச்ருதி சொல்லுகிறது) அவனைத்தான் ப்ரஹ்மமென்கிறார்கள். அவனைத்தான் ப்ரஹ்மமென்கிறார்கள். இத்யாதி ஸூத்ரங்களால் ஸாமாந்ய விசேஷ சப்தங்களாலே (பொதுப் பெயர்களினாலும் குறிப்பிட்ட பெயரினாலும்) பரதேவதை இன்னாரென்று காட்டப்பட்டது. இந்தக் காண்டத்துக்குக் கர்த்தாவாகிய காசக்ருத்ஸ்நரைப் பாதராயணாசார்யர் அங்கீகரித்திருக்கிறார். இவ்விருவரும் ஏக அபிப்ராயமுள்ளவர்கள் என்பது ஸ்ரீபாஷ்யத்தில் வ்யக்தம்.

ஆகையால் பூர்வ உத்தர மீமாம்ஸைகளுக்கு கடகமாக (ஒன்று சேர்க்கும் தன்மையதாக) ஸங்கர்ஷகாண்டம் ப்ரவ்ருத்தமாயிருக்கலாம். இதற்கு 'ஸங்கர்ஷ' வென்கிற பெயர் ஸங்கர்ஷண ஸித்தாந்தமாகிற பாஞ்சராத்ர ஸம்ப்ரதாயமாக வந்திருக்கலாம். த்வைத ஸித்தாந்த பாஷ்யகாரராகிய பூர்ணப்ரஜ்ஞாசார்யரும் தைவீ மீமாம்ஸையில் இரண்டாவது அத்யாயத்தை சேஷர் செய்தாரென்று அநுவ்யாக்யாநத்தில் சொல்லியிருக்கிறார். ஆகையால் இதை சேஷராகிய ஸங்கர்ஷணர் செய்தார் என்று ஊஹிக்க வழியுண்டு. பூர்வ உத்தர பாகங்களை இழுத்துச்சேர்த்து நிறுத்தியிருப்பதால் ஸங்கர்ஷ சப்தம் உசிதமென்றும் சொல்லலாம்.

இந்தத் தைவீ மீமாம்ஸை அநாதியென்பதை மாண்டூக்ய உபநிஷத் காரிகையைச் செய்த கௌடபாதாசார்யரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

ஆகையால் இந்த ஸம்ப்ரதாயம் அநாதியாயிருந்ததென்பதும், காலவசத்தால் விசதமில்லாமல் மறைந்திருந்து ஸ்ரீபாஷ்யகாரரால் அது மறுபடியும் விசதமாக்கப்பட்டதென்பதும் விவாதமற்ற விஷயம்.

## 9. ஆகம ப்ராமாண்யம்.

இந்த ஸம்ப்ரதாயத்துக்கு அஸாதாரண ப்ரமாணங்களான ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமங்களை ப்ரமாணமல்லவென்று சிலர் வாதித்ததினால் வந்த உபரோதத்தை ஸ்ரீயாமுனாசார்யர், ஆகம ப்ராமாண்யம் மஹாபுருஷ நிர்ணயம் முதலான க்ரந்தங்களால் பரிஹரித்து ஸம்ப்ரதாயத்தை நிலைநிறுத்தினர். ஆனாலும் இது ஔபநிஷதமல்ல (உபநிஷத்துக்களில் நிலை பெற்றதல்ல), கேவலம் ஆகமங்களால் மட்டும் சொல்லப்பட்டது என்ற ஆக்ஷேபங்கள் இருந்துகொண்டேயிருந்தன. இத்தகைய உபரோதங்களை நீக்குவதற்காகவே ப்ரஸ்தான த்ரய பாஷ்யம்முதலிய க்ரந்தங்களை ஸ்ரீபாஷ்யகாரரருளிச்செய்தது.

## 10. ப்ரபத்தி.

இவைகளில் முக்கியமாய்ப் பரதேவதா பாரமார்த்ய நிர்ணயத்துக்காக இவரங்கீகரித்தது 'கௌஷீதக்யுபநிஷத்'. இதன் ஸாராம்சத்தைத்தான் ஆழ்வார்கள் அநுஸந்தித்தது.

1. 'இந்த்ரம் ஶரணம் ப்ரபந்நோ(அ)பூவம்' (சாந்தோக்யம்)—இந்திரனை (எல்லாவற்றையும் நியமனம் பண்ணும் பகவானை)ச் சரணமடைந்தேன்.

2. 'முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே' (ச்வேதாச்வதரம்) மோக்ஷத்தை விரும்பிச் சரணமடைகிறேன்;

3. 'யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:' 'யதோ தா: ப்ரஸாதாஜ் ஜுஷ்டம் யதா பஶ்யதி' (கடோபநிஷத்)— யாதொருவனையே பகவான் அங்கீகரிக்கிறானோ அவனால் அடையக்கூடியவன்;

எல்லாவற்றையும் படைத்த ஈச்வரனுடைய அநுக்ரஹத்தினால் சரணமடைந்தவனைக் காணும்போது,

என்பது முதலான வாக்யங்களைப் பார்த்தால் ப்ரபத்தி, சரணாகதி, சரணம், அநுக்ரஹம், ப்ரஸாதம் முதலியவைகளெல்லாம் உபநிஷத்துக்களிலேயே பேசப்பட்டவை என்று ஏற்படுகிறது. இந்த ஸம்ப்ரதாயத்தை



ஸ்ரீபாஷ்யகாரர் விசதமாக்கித் தாமனுஷ்டித்துப் பிறர்களுக்கு உபதேசித்து க்ரந்தங்களையும் அருளிச்செய்தபடியால் இதற்குப் பகவத் ராமாநுஜ தர்சனமென்று பெயர் வந்தது.

## 11. ஸாராம்சம்.

இந்த மார்க்கமும் ஔபநிஷத் மார்க்கமும் பிந்ந (வெவ்வேறு) ப்ரஸ்தாநங்களென்று வந்த தூஷணத்தை நிராகரித்து அவை அபிந்நங்கள் (வெவ்வேறல்ல) என்கிற அநாதி ஸம்ப்ரதாயத்தை ஸ்ரீபாஷ்யகாரர் நிலைநிறுத்தினர். இது அநாதிஸித்தம், வாஸுதேவ ஸம்ப்ரதாயஸித்தம் என்னும் அம்சம் முன்னாலேயே நிரூபிக்கப்பட்டது.

இந்த ரஹஸ்யத்தை ஸ்ரீபாஷ்யத்தில் பாஞ்சராத்ராதிகரணத்தில் நிரூபித்தருளினர். அதாவது, 'ஸாங்க்யம் யோக: பாஞ்சராத்ரம் வேதாரண்யகமேவ ச । பரஸ்பராங்காந்யேதாநி பஞ்சராத்ரம் து கத்யதே ।' என்னும் மஹாபாரத வசந தாத்பர்ய நிரூபணத்தால் எல்லா சாஸ்த்ரங்களுடையவும் அர்த்த ஸங்க்ரஹம் ஸ்பஷ்டமாகிறது. எப்படியென்றால், ஸாங்க்ய சாஸ்த்ரத்தில் தத்வங்களுடைய ஸ்வரூபம் நிரூபணஞ் செய்யப்பட்டிருக்கிறது. யோக சாஸ்த்ரத்தில் யமம் நியமம் முதலிய அஷ்டாங்க த்யானயோகம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. வேதத்தில் யஜ்ஞயாகாதி ரூபமான கர்ம ஸ்வரூபம் நிரூபிதமாயிருக்கிறது. ஆரண்யகத்தில் (உபநிஷத்தில்) ஜகத்காரண வஸ்துவான பரப்ரஹ்ம ஸ்வரூபம் உபதேசிக்கப்படுகிறது. இவைகளுக்குப் பரஸ்பரம் அங்காங்கி பாவத்தால் ஏகத்வம் (ஒன்றாயிருத்தல்) வந்தால் பாஞ்சராத்ர சாஸ்த்ர ப்ரமேயம் ஸித்தமாகும். அதாவது, ஸாங்க்யத்தில் சொல்லும் தத்வங்கள் ஸ்வதந்த்ரங்களல்ல, பகவானுக்குப் பரதந்த்ரங்கள்; யோகத்தில் சொன்ன த்யாநம் ஜீவவிஷயமல்ல, பரப்ரம்ம விஷயமாக அறியவேண்டும்; வேதத்தில் சொல்லும் கர்மங்கள் ஸ்வர்க்காதி ஸாதநங்களும் ஸ்வதந்த்ரங்களுமல்ல. பகவதாராதன ரூபமாய் வேண்டியவர்களுக்கு வேண்டிய பயனைக் கொடுக்கத்தக்கவை என்று தெரிந்துகொள்ளவேண்டும் என்றபடி. இந்த ப்ரகாரமாக எல்லா ஸித்தாந்தங்களுக்கும் ஸாமரஸ்யம் பண்ணி ரஹஸ்ய அம்சத்தை உபதேசிக்குமது (ஸ்ரீபாஞ்சராத்ரமென்னும்) பகவத் சாஸ்த்ரம். இப்படி ஸ்ரீபாஷ்யத்தில் நிரூபிக்கப்பட்டிருப்பதால், இந்த ஸம்ப்ரதாயம் பகவானால் பரிக்ரஹிக்கப்பட்டதாய் அநாதியாயிருப்பதால், இவ்விஷயத்தில் துர்வாதங்கள் ஒன்றுக்கு மவகாசமில்லை.

ஸ்ரீராமாநுஜோ விஜயதே யதிராஜ ராஜ: ॥

## ஶ்ருதி ப்ராமாண்யம்.

(ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைலசக்ரவர்த்தி, பீ. ஏ.)

### அவதாரிகை.

அவாப்தஸமஸ்த காமனுய், ஸகலகல்யாண குணத்மகனுயிருக்கும் ஸ்ரீயஃ பதியான ஸர்வேச்வரன் ஸ்ரீவைகுண்டம் என்கிற திவ்யலோகத்தில் திருமாமணிமண்டபத்தில் ஸ்ரீபூமீநீளாஸமேதனுய் ரத்நஸிஹ்மாஸனத்தில் வீற்றிருந்து, நித்யர்களாலும் முக்தர்களாலும் இடைவிடாமல் கைங்கர்யம் செய்யப்பெற்று, அநவரதம் பரிசரிக்கப்பட்ட தாம்ரைத்தாள்களை யுடையவனுய், அவர்கள் போலவே தம் பாதபத்மஸேவைக்கு அர்ஹர்களாயிருந்தும் அதை இழந்து, ப்ரளயகாலத்தில் உரைமெழுகில் பதிந்தஸுவர்ண கணம்போல், ப்ரக்ருதியில் லயித்து ஞானம் குன்றியிருக்கும் ஜீவர்களைப்பார்த்துக் கிருபைகூர்ந்து, மஹத், முதலிய ஸ்ருஷ்டிக்ரமத்தில் அவர்களுக்குத் தன் பாதாரவிந்த ஸமாச்ரயணத்திற்கு உசிதங்களான கரணகளேபரங்களைக் கொடுத்தும், அவைகளைக்கொண்டு அவர்கள் உஜ்ஜீவிக்காமல் நதியைத்தாண்டுவதற்காகக் கொடுக்கப்பட்ட ஓடங்கள்மீதுஏறி நதீவேகம் போனபோக்கிலேயே சென்று கடக்கமுடியாத மஹாஸமுத்ரத்தை யடைவார்போல, அந்தக்கரணகளேபரங்களைக்கொண்டே விஷயஸுகங்களில் மேன்மேலும் பற்றுதல்வைத்து அவற்றையே அனுபவித்துக்கொண்டு இந்தஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கியிருக்குஞ் சேதனர்களை உஜ்ஜீவிப்பிக்கவேண்டி அவர்கள் நன்மை தீமைகளை யறியும்பொருட்டு ஆதியந்தமில்லாததாயும், விச்சேதமற்ற பாடஸம்ப்ரதாய முள்ளதாயும், ப்ரமாதம்முதலிய தோஷலேசகந்தமுமில்லாததாயுமிருக்கும் வேதமென்னும் சாஸ்திரத்தை ப்ரவ்ருத்திப்பித்தான்.

அந்த சாஸ்த்ரமானது, பரமபுருஷாராதனம்என்கிற புண்ய கர்மாவைச் செய்தால் அவனுடைய அநுக்ரஹத்கால் ஸுகரூபபலம் கிடைக்குமென்றும், அதற்கு வித்யாஸமாய்ப் பாபரூபமானகர்மாவைச்செய்தால் அவனுடைய நிக்ரஹத்தால் துக்க ரூபபலம் கிடைக்குமென்றும் சொல்லுகிறது. வேதம் கர்மகாண்டமென்றும் ப்ரஹ்மகாண்டமென்றும் இரண்டுபாகத்தோடு கூடியுது. ஆராதநரூபமான கர்மத்தை ப்ரதிபாதிப்பது பூர்வகாண்டம். ஆராதிக்கப்படும் ப்ராஹ்மத்தை ப்ரதிபாதிப்பது உத்தரகாண்டம்.

### ஶ்ருதி முதலிய பதங்களின் அர்த்தம்.

இவ்விதம் இரண்டு பாகங்களான கர்மப்ரஹ்மகாண்டங்களோடு கூடியதாய் அதனுல் ஓரேசாஸ்திரமாயிருக்கும் ஶ்ருதியென்றும், நிகமமென்



றும், ஆகமமென்றும், ஆம்நாயமென்றும், ஸமாம்நாயமென்றும், சந்தஸ்ஸென்றும், ஸ்வாத்யாயமென்றும், அநுஶ்ரவமென்றும், த்ரயீஎன்றும் சொல்லப்பட்ட அக்ஷரராசிரூபமான சாஸ்த்ரமானது இன்னுரால் இக்காலத்தில் செய்யப்பட்டதென்று சொல்லமுடியாததும், நமது சூர்யமதத்திற்கும், தர்மாநுஷ்டானங்களுக்கும், சட்டத்திற்கும், தத்வநிர்ணயத்திற்கும் மூலமாய் நெடுங்காலமாய் வழங்கிவருவதென்பதும் ஆஸ்திகர்களனைவருக்கும் தெரிந்த விஷயம். 'ஶ்ரூயதே நித்யமிதி ஶ்ருதிஃ' (என்றைக்கும் கேட்கப்படுவதால் ஶ்ருதியென்று பெயர்). விந்தந்தே ஜ்ஞாயந்தே அமீபிர் தர்மாதயஃ புருஷார்த்தா இதி வேதாஃ' (தர்மம்முதலிய புருஷார்த்தங்கள் கிடைப்பதால் வேதமென்று பெயர்) 'ப்ரத்யக்ஷேணாநுமித்யா வா யஸ்தூபாயோ ந புத்யதே । ஏதம் விதந்தி வேதேந தஸ்மாத் வேதஸ்ய வேததா ॥' ப்ரத்யக்ஷாநுமானங்களால் அறியமுடியாத உபாயத்தைத் தெரிவிப்பதால் வேதமென்றுபெயர். இதை மூலமாய்க்கொண்டதால் ஸ்ம்ருதிகளுக்கும் சாஸ்த்ரமென்று பெயர். 'ஶிஷ்யதே உபதிஶ்யதே அநேநேதி ஶாஸ்த்ரம்'—ஶாஸநாத் ஶாஸ்த்ரம்' ப்ரவ்ருத்தி தர்மங்களையோ அல்லது நிவ்ருத்திதர்மங்களையோ எது உபதேசிக்கின்றதோ, அது நித்யமானுலும் உண்டானதாயிருந்தாலும் அதற்குச் சாஸ்திர மென்றுபெயர். 'ப்ரவ்ருத்திர் வா நிவ்ருத்திர் வா நித்யேந க்ருதகேந வா । பும்ஸாம் யேநோபதிஶ்யேத தச்சாஸ்த்ரம் அபிதீயதே ॥'

### வேதத்தின் ரூபங்கள்.

வேதம் மந்த்ர ரூபமாயும் ப்ராஹ்மணரூபமாயு மிருக்கிறது. அவைகளில் மந்த்ரம்என்பது ப்ரயோககாலத்தில் அவச்யம் அறியவேண்டிய கர்மத்தின்ஞானத்தை உண்டாக்குவது. 'உரு ப்ரதிஷ்டா த்யோஹாமஃ' என்கிறமந்த்ரமானது ஜலப்ரோக்ஷணத்தை ஜ்ஞாபிக்கின்றது. ப்ராஹ்மணம் என்பது விதி, நிஷேதம், அர்த்தவாதம் என மூன்றுவகைப் பட்டது. அவற்றில் விதிஎன்பது 'ஸத்யம் வத' 'தர்மம் சர' (ஸத்யத்தைச் சொல் தர்மத்தைச் செய்) என்பது போன்ற கட்டளை. நிஷேதம் என்பது 'நகலஞ்ஜம் பக்ஷயேத்' 'நஸுராம் பிபேத்' (களஞ்சபக்ஷணம் செய்யாதே - ஸுராபானம் செய்யாதே) என்றிவைபோன்ற விலக்கான ஆஜ்ஞை. அர்த்தவாதங்கள் என்பவை விதியையோ அல்லது விலக்கையோ நன்குஎடுத்துக்காட்டி நாம் ப்ரவ்ருத்திப்பதற்கோ அல்லது நிவ்ருத்திப்பதற்கோ நமக்கு ருசியை உண்டு பண்ணவேண்டி, திருஷ்டாந்த ரூபமானகதைகள்போல் உள்ளன. உதாரண

மாய், 'வசீ-லவா வஊதஷு) ஜதுஸு) க்ரியதெ பதூ) யாஜா-நா யாஜா ஐஜூ)ம தெ', ப்ரயாஜாநுயாஜங்கள் தர்சபூர்ணமாஸ யாகத்திற்குக் கவசம் போன்றவை) என்பதால் ப்ரயாஜாதிகளைச் செய்யவேண்டும் என்பதில் ருசியை உண்டு பண்ணுகின்றன.

## வேதத்தின் நான்கு சாகைகள்.

இப்படி. மந்த்ர, ப்ராஹ்மணரூபமானவேதமானது ருக் - யஜுஸ் - ஸாம அதர்வணம் என்கிற நான்குசாகைகளையுடைய ஒரு வ்ருக்ஷம். அந்த சாகைகளில் ருக்வேதம் என்பது பாத அமைப்போடுகூடின ஸ்தோத்ரரூபமான ரிக்குக்களின் ஸமூஹம். யஜுஸ்என்பது யாகம் முதலியவைகளின் ஸ்வரூபம் முதலியவற்றைப்போதிப்பது. ஸாமம் என்பது கானம் செய்யக்கூடிய மந்த்ரஸமூஹம். அதர்வணம் என்பது சாந்தி, ப்ரதிஷ்டை முதலியவைகளுக்கும், மாரணம், உச்சாடனம், ஸ்தம்பனம், மோஹனம், ஆபிசாரிகம் முதலியக்ரியைகளுக்கும், ஆக்நேயவாயவ்யாதி அஸ்த்ர ப்ரயோகங்களுக்கும் உபயுக்தமான மந்த்ரங்களை விசேஷமாயுடையதாயும், இன்னும் சில ஸௌம்யமந்த்ரங்களும் ப்ராஹ்மணங்களும் அடங்கியது

இவ்விதம் மந்த்ரப்ராஹ்மணரூபமான நான்கு வேதங்களும் ஐஹிகாமுஷ்மிகங்களையும், அவைகளின் ஸாதனங்களையும் (யதாஸம்பவம் வாதிகளாய்) உள்ளது உள்ளபடியே சொல்லிக்கொண்டு அந்தந்த அதிகாரிகளுக்கு வேண்டிய விஷயங்களைப்போதிக்கின்றன. அதில் அந்தந்த அதிகாரி தனக்கு வேண்டிய அம்சத்தை 'எங்கும் ஜலம் நிறைந்த குளம் முதலியவற்றில் நமக்குத்தேவையான அளவு ஜலத்தை நாம் ஸ்வீகரிப்பதுபோல், எடுத்துக்கொள்ளவேண்டு' மென்று முமுக்ஷுவான அதிகாரியைப்பற்றி 'யாவாநர்த்த உதபாநெ' என்கிற ச்லோகத்தில் ஸ்ரீகீதாசார்யன் அருளிச்செய்தார்.

## வேதமும் மற்ற வித்யைகளும்.

வேதத்தில் ஸர்வவித்யைகளும் அடங்கியிருக்கின்றன. அநேக தர்சன வாதங்கள் ஸங்க்ரஹமாயும் விஸ்தாரமாயும் சொல்லப்பட்டிருக்கின்றன. உதாஹரணமாய் ச்வேதாச்வதரோபநிஷத்தில் 'காலஃ ஸ்வபாவோ நியதிர்யத்ருச்சா பூதாநி யோநிஃ புருஷ இதி சிந்த்யம் । ஸம்யோக எஷாம் நத்வாத்ம பாவாத் ஆத்மாப்யநீசஃ ஸுகதுஃகஹெதோஃ' — ஸர்வ ஜகத்திற்கும் காரணம் எது என்றால் (1) காலம் தான் காரண மென்று காலக்ஞர்களும்,



(2) ஸ்வபாவமே காரணம் என்று லோகாயதிகர்களும்,

(3) நியதி என்கிற புண்யாபுண்ய ரூபமான கர்மமே காரணமென்று மீமாம்ஸகர்களும்,

(4) தற்செயலால் உண்டாயிற்றென்று நிரீஶ்வர வாதிகளும்,

(5) பூதங்கள் தான் காரணமென்று ஜகத்து நித்யமென்னும் வாதிகளும்,

(6) ப்ரக்ருதிதான் காரணமென்று ப்ரக்ருதி வாதிகளும்,

(7) மற்றும் சிலர் புருஷன் காரணமென்றும் சொல்லுகிறார்கள். மேற்கூறியவை அநேகதோஷங்களையுடையவை யாகையால் காரண மாகமாட்டா. ஏனெனில், அசேதநமோ அல்லது சேதனமோ தனித்தனியாக ஜகத்காரணமாகாது. இவைகளைச் சேர்ப்பதற்கு ஆத்மா இருப்பதால் சேர்க்கைகூடும் என்று சொல்லவொண்ணாது. ஆத்மாவுக்கு ஸ்வாதந்த்ர்யம் இருக்குமானால் ஸுகத்தையே அநுபவிக்கும்; துக்கத்தை அநுபவிக்கவேமாட்டாது." என்று இவ்வகையான தர்சனங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

மேலும் ஸாஹித்ய சாஸ்திரத்தைச்சேர்ந்த அலங்காரங்களும், ரஸம் முதலிய மற்றவிஷயங்களும் அலங்கார ப்ரியையும் ரஸிகையுமான ஶ்ருதி தேவியினிடத்தில் காணப்படுகின்றன.

(1) 'அக்நெர்வா ருக்வெதோ ஜாயதெ வாயோர்யஜுர்வெதஃ ஸூர்யாத் ஸாமவெதஃ । ஜாயெவ பத்ய உஶதீ ஸுவாஸா உஷா ஹஸ்ரெவ நிரிணீதெ அப்ஸஃ'

(ருக்வேதம் அக்நியிலிருந்தும், யஜுர்வேதம் வாயுவினிட மிருந்தும், ஸாம வேதம் ஆதித்யனிட மிருந்தும் உண்டாயின என்றிவை முதலிய வாக்யங்களால் கர்மாதீனமான சரீரத்தையுடைய அக்நி முதலிய ஜீவர்களிட மிருந்து வேதங்கள் உண்டாயின என்று ஏற்படுகிறது. ஆகையால் வேதத்திற்குச் சரியான லக்ஷணம் சொல்லமுடியாது.

அதுபோலவே இதர ப்ரமாணத்தால் வேதத்தை அறிய முடியாது. குடம் வஸ்திரம் முதலிய வஸ்துக்களை, அவைகளைக் காட்டிலும் வேறான வெளிச்சம் முதலியவற்றாலேயே அறிகிறோம். ஒருவஸ்து தன்னைக்குறித்துத்தானே ப்ரமாணம் ஆகாது. ஒருவன் தன்னுடைய தோளின்மேல் தானே ஏறி உட்காரமுடியுமா? முடியாது. அதுபோல வேதம் தன்னைக் குறித்துத் தானே ப்ரமாணம் ஆகாது. அதற்கு வேறு ப்ரமாணமுமில்லை.

ஆதலால் வேதம் என்பதற்கு லக்ஷணமும் ப்ரமாணமும் இல்லாததால் வேதம் என்பதே கிடையாது - என்று.

### இதற்கு ஸமாதானம்.

மந்த்ர ப்ராஹ்மண ரூபமாயிருப்பது வேதம் என்று லக்ஷணம் சொல்லில் யாதொரு தோஷமும் வருவதில்லை. ஆபஸ்தம்பரும் 'மந்த்ரப்ராஹ்மணயோர் வேதநாமதேயம்' (மந்த்ர ப்ராஹ்மணங்களுக்கு வேதம் என்று பெயர்) என்னும் ஸூத்ரத்தினால் வேதஸ்வரூபத்தைத் தெரிவித்தார்.

வேதம் என்னும் பதார்த்தம் உண்டென்பதற்குச் சுருதி ஸ்ம்ருதி லோகப்ரஸித்தி இவைகள் ப்ரமாணங்கள். சுருதி மூலமாய் ஸ்ம்ருதியும் அவ்விரண்டு மூலமாய் லோகப்பிரஸித்தியும் ப்ரமாணங்கள். அவைகளில் ச்ருதி ஸ்வயமாய்த் தானே ப்ரமாணம். ஸூர்யன் சந்திரன் முதலியவைகள் மற்ற வஸ்துக்களையும் தங்களையும் எவ்விதம் காட்டிக்கொடுக்கின்றனவோ, அவ்விதம் சுருதியும் தன்னைக்காட்டிலும் வேறான வஸ்துக்களைப் பிரகாசிப்பித்துக் கொண்டு தன்னையும் பிரகாசிப்பிக்கின்றது. சுருதிக்குத் தடங்கலற்ற சக்தியுண்டு. அது நடந்தது, நடக்கப்போகிறது, தூரத்திலிருப்பது, பக்கத்திலிருப்பது முதலிய வெகு அர்த்தங்களைப்போதிக்கும். ஆகையால் ச்ருதி ஸ்வதஃ ப்ரமாணம். இவ்விதம் லக்ஷண ப்ரமாண ஸித்தமான வேதத்தை ஆக்ஷேபிக்க முடியா ததலால் வேதம் என்கிற பதார்த்தம் உண்டு என்று சொல்லத்தட்டில்லை.

(தொடரும்.)

## ஆபோசந நிர்ணயம்.

(ஸ்ரீ உ. வே. தி. நடாதூர் நரஸிம்மாசார்யர்.)

ஆபோசநத்தின் ஸ்வரூபம் தைத்திரீய உபநிஷத்தின் இரண்டாவது ப்ரஸ்நத்தில் ப்ராணாக்நிஹோத்ர மந்த்ரங்களுக்கு முன்னும் பின்னுமாய் 'அம்ருதோபஸ்தரணமஸி' (அம்ருதமே, நீ அந்நத்துக்கு விரிக்கப்பட்ட ஆஸ்நமாகிறாய்), 'அம்ருதாபிதாநமஸி' (அம்ருதமே, நீ அந்நத்துக்கு மூடியாகிறாய்) என்று இரண்டு மந்த்ரங்களால் படிக்கப்படுகிறது. முதல் மந்த்ரத்தால் முந்திய ஆபோசநமும், இரண்டாவதால் பிந்திய ஆபோசநமும் செய்யவேண்டியது. இது எல்லா சாகைக்காரர்களுக்கும் ஸமாநம். 'பகலிலும் இரவிலும் அநுயாகம் (போஜநம்) பண்ணும்போது அந்தர்யாமிக்கு நிவேதனம் செய்த பிறகு பரிஷேசநம் பண்ணிவிட்டு ப்ராணாஹுதி செய்வதற்கு



முன்னும், போஜநம் செய்தபிறகு முடிவிலும், பெருமாளுடைய பாத்ய தீர்த்தத்தால் இது செய்யப்படவேண்டும் என்னப்படுகிறது.

இந்த ஆபோசநம் அநுயாகத்துக்கு அங்கமா, அல்லது சாப்பிடப்பட்டவைகளுக்கெல்லாம் சாப்பிடும்போது அங்கமாயிருப்பதா என்று விவாதம். இது ப்ரச்ந ப்ரத்யுத்தர ரூபமாக இவ்விடத்தில் சொல்லப்படுகிறது.

ஸித்தாந்தி—பொதுவாய் எல்லா ஆஹாரத்துக்கும் அங்கமாய், ஆஹாரம் பண்ணும்போதெல்லாம் ஆபோசநம் செய்யவேண்டும்.

பூர்வபக்ஷி—வசநங்களைப் பார்த்தால் இது அநுயாகத்துக்கு அங்கமாகத்தான் காணப்படுகின்றது.

ஸி—அநுயாகத்துக்கு அங்கமென்றால், ஆஹார ஸாமாந்யத்துக்கும் (எல்லாவற்றுக்கும்) அங்கமல்ல வென்னப்பட்டதோ?

பூ—எல்லாவற்றுக்கும் அங்கமென்பதை உதாஹரிக்க வசநமுண்டோ?

ஸி—ஸாவதானமாய்க் கேள், சொல்லுகிறேன். ஸ்ரீ பாஷ்யத்தில் 3-வது அத்யாயம் குணோபஸம்ஹார பாதத்தில் 'கார்யாக்யாந' அதிகரணத்தில், சாந்தோக்ய வாஜஸநேய உபநிஷத்துக்களில், "ப்ராணேந்திரியத்தை 'ஜ்யேஷ்ட' னென்றும் 'ச்ரேஷ்ட' னென்றும் உபாஸிக்க வேண்டுமென்றுவிட்டு, அந்த ப்ராணனுக்கு ஜலம் வஸ்த்ரமென்று சொல்லப்படுகிறது. ஆகையால்தான் சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் ஆசமனம் செய்கிறார்கள். அந்த ஜலத்தினால் ப்ராணனுக்கு வஸ்த்ரம் உடுத்தின மாதிரியாகிறது" என்று சொல்லுகிற உபநிஷத் வாக்யங்களினால் ஆபோசநரூபமான ஆசமநம் விதிக்கப்பட்டிருக்கிறதா, அல்லது ஆபோசந ஜலத்தில் ப்ராணத்ருஷ்டி (ஆபோசன ஜலமே ப்ராணன் என்னும் நோக்கு) விதிக்கப்படுகிறதா என்று விசாரித்துக் கடைசியில் ஆசமனம் ஸ்ம்ருதி ஆசாரத்தினால் கிடைத்ததாகையால், அதை அநுவாதம் பண்ணி ப்ராணனுக்கு அந்த ஜலம் வஸ்த்ரம் என்னும் த்ருஷ்டியே விதிக்கப்படுகிறது என்று ஸித்தாந்தம் பண்ணப்பட்டது.

மேலும் இந்த ப்ராணவஸ்த்ரத்ருஷ்டிக்கு உத்தேச்யம் போஜந பூர்வாங்கமான ஆசனமல்ல; ஆபோசன ஆசமன ஜலந்தான் என்று அந்த விடத்திலுள்ள ஸ்ரீ பாஷ்ய ச்ருதிப்ரகாசிகா பங்க்திகளால் ஸ்பஷ்டமாகிறது.

இந்த வாக்யங்களிலெல்லாம் பொதுவாய் எதையாவது சாப்பிடும்போதெல்லாம் ஆபோசநம் அவச்யம் பண்ணவேண்டுமென்று ஏற்படுகிறதே தவிர, இன்ன ஸமயத்தில்தான் என்று விசேஷித்துச் சொல்லப்படவில்லை.

பூ—இவ்வாக்யங்களுக்கு வஸ்த்ரத்ருஷ்டியில் முக்கியதாத்பர்யம். ஆபோசநத்தில் நோக்கு என்றாலும், அநுயாகத்தில் விதிக்கப்படும் ஆபோசந விஷயத்தில் இவ்வர்த்தம் தலைக்கட்டிவிடுகிறது. மற்ற ஆஹாரங்களில் இதைச் சேர்ப்பானேன்?

ஸி—இதைக்காட்டிலும் ஸ்பஷ்டதரமான ப்ரமாணமு முண்டு. அநுயாகப்ரகரணத்தில் முன்படித்த இந்த ஆபோசந மந்த்ரமே மந்த்ர ப்ரச்நத்தில் மதுப்ரகரணத்திலும் படிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அபிப்ராயம், இது அநுயாகமல்லவாகையால், போஜந அங்கங்கள் இவ்விடத்தில் செய்யப்படாமலொழியக் கூடுமென்று ஸந்தேஹித்து, செய்யவேண்டுமென்று மறுபடியும் படித்தது தான். மேலும் ' [illegible] ' முதலான க்ரந்தங்களிலெல்லாம் போஜநாங்கமான ஆபோசநம், அதற்கு அங்கமான ஆசமனம் ஆனவையெல்லாம் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஆஹாரஸாமான்யத்திலும் போஜநத்வ புத்தியாலே ஆபோசநம் பண்ணவேண்டுமென்றதாயிற்று.

பூ—இருக்கட்டும். விசேஷ விதியாலே மதுபர்க்கத்தில் மட்டும் போஜநம் என்னும் புத்தியைப் பண்ணி, அதன் அங்கமான ஆபோசநாதிகளைச் செய்வோம்; மற்ற அவல், மாவு முதலிய பண்டங்களிலும் ஏன் அந்தப் புத்தி பண்ணவேண்டும்?

ஸி—'எனக்கு என்ன அன்ன' மென்று கேட்ட ப்ராணேந்திரியத்தைக் குறித்து வாக்கு முதலிய இந்திரியங்களால் சொல்லப்பட்ட சாந்தோக்ய வாக்யமாகிய 'யதி³த³ம் கிஞ்ச ஆஶ்வப்⁴ய ஆக்ருமிப்⁴ய ஆகீடபதங்கே³ப்⁴யஸ் தத்தே அந்நமிதி' என்பதை எடுத்து ச்ருத ப்ரகாசிகையில் அந்தந்த ப்ராணிகளுக்குச் சாப்பிடத் தக்கவையும் பசியைத்தீர்த்து ப்ராணனை த்ருப்திசெய்யக் கூடியவையுமான ஆஹாரங்களினிடத்தும் ப்ராண அந்நத்வ த்ருஷ்டி பண்ணவேண்டியதுடன், ஆபோசந ஜலத்திலும் ப்ராணனுக்கு வஸ்த்ரமாயிருக்கும் த்ருஷ்டியையும் பண்ணவேண்டுமென்று ஸ்ரீபாஷ்ய பங்க்திக்கு விவரணம் சொல்லப்பட்டிருக்கிறது. இது மிகவும் ஸ்பஷ்டமான ப்ரமாணம்.

இந்த ஸம்வாதத்தினால் பசியைத்தீர்த்து ப்ராணனை த்ருப்தி செய்விக்கும் ஸர்வ விதமான அந்நம், அவல், மாவு, மாம்ஸம், மதுபர்க்கம், பழம்முதலிய ஆஹாரங்களைச் சாப்பிடும்போதும், போஜநபுத்தியை அதனிடத்தில் பண்ணி இரண்டு ஆபோசநங்களையும் செய்ய வேண்டுமென்றும், ப்ராணாஹுதிக்கும் ஆபோசநத்துக்கும் ஸம்பந்தம் கிடையாதென்றும், அப்படியே அநுயாகத்துக்கும் இதுக்கும் ஸம்பந்தமில்லையென்றும், ராத்திரியில் உப்போடு கூடிய அந்நத்தினாலும் ப்ராணாஹுதி செய்யலாமாகையாலும், ஏகாதசி முதலிய தினங்களில் அநுயாகமில்லாவிட்டாலும் ப்ராணாஹுதி மந்த்ரஜபமும் அவச்யமில்லாத ஸமயத்திலும், ஆபோசநம்மாத்திரம் பண்ணவேண்டியதவச்யமென்றும் ஸித்தாந்தமாயிற்று.



ஸ்ரீ:.

## நீதிஸ்லோகங்கள்.

(ஸ்ரீ. உ. வே. நெடுந்தெரு - ஸ்ரீநிவாஸாசார்யர்.)

' [illegible] ॥ '

இதனர்த்தம்.

பிராணிகளுக்கு மானுட ஜன்மமானது கிடைக்கத் தகாதது முயர்ந்ததுமானது. ஆனால் ஸ்திரமில்லாதது. பெண்டாட்டி வீடு முதலிய ஸம்பத்தும் அடிக்கடி ஆலோசித்துப் பார்த்தால் விபத்தாகவே இருக்கின்றது. எவ்வளவு காலம் அநுபவித்தாலும் ஆசையடங்குகிறதில்லை. ஆகலால் ச்ரேயஸ்ஸை விரும்புவோர் ஸ்திரமான தர்மத்தை யெப்போதும் தேட முயலவேண்டும்.

முன்னொரு ஸமயம், காச்யபன் என்னும் ருஷிகுமாரன் ஒரு வைசியனின் ரதத்தால் வீழ்த்தப்பட்டு, 'பொருளில்லாத நான் பிழைத்திருப்பதைவிட இப்படியே இறந்து போவது நல' மென்று வெறுப்புடன் படுத்திருந்தான். அச்சமயம் தேவேந்திரன் நரிரூபமாய் அவனருகில்வந்து, 'மனுஷ்ய ஜன்மம் எவ்வளவோ மேலானது. அது எல்லாருக்கும் கிடைக்கிறதில்லை. நாங்கள் கை முதலியவை யில்லாமையால் கடிக்கும் கொசுக்களை ஓட்டுவதற்கும், தைக்கும் முள்ளைப் பிடுங்குவதற்கும், நல்லது பொல்லாதவை களைத்தெரிந்து தேடிக்கொள்வதற்கும் முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். தெய்வகதியாய் இம்மாதிரி யெல்லாம் பிறவாமல் நீ மனிதனாயும் பிராமணனாயும் வேதங்களைக் கற்றவனாயு மிருக்கிறாய். பொருள் லாபமென்பது அவரவர்களின் எண்ணத்தைப் பொறுத்தது. கைமுதலியவை யில்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றிருப்பதும், ஏழைக்குப் பணக்காரனாயிருப்பதும், பணக்காரனுக்கு அரசனாயிருப்பதும், அரசனுக்கு இந்திரனாயிருப்பதும், பெரிதாகத் தோற்றுகிறது.

மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு விஷயருசியை அறியவில்லையோ அதுவரையில் தான் அவனுக்குச் சுகம். தெரிந்துவிட்டால் மேன்மேலும் அதையே மனது நாடிக்கொண்டிருக்கும். உன்னிலும் தாழ்ந்த ஜந்துக்களும், சண்டாளர், நொண்டி முதலியவர்களும் பிராணனை மாய்த்துக்கொள்ளத் துணிகிறதில்லை. அவைகளும் பிழைக்கும் வகையைத்தேடிக்கொள்ளுகின்றன. 1. இந்திரனுக்கும் அசுசியான பன்றிக்கும் சுகதுக்கத்திலோ, மரண பயத்திலோ வாசியில்லை கிடையாது. ஆகாரத்திலும் போகத்திலும் மாத்திரம் அவரவர்களெண்ணத்தால் அமிருதம், மலம், ரம்பை, பெண்பன்றி என்னும் பேதம் அவர்களின் எண்ணத்தா லேற்பட்டிருக்கிறது. மனிதர்களில் எத்தனையோ பெயர்கள் அடிமைத்தனம், மரணம், பந்தம் முதலியவைகளை யடைந்து பரிதபிக்கிறார்கள். 'நான், முன்ஜன்மத்தில் அர்த்தசாஸ்திரம் தர்க்கசாஸ்திரம் முதலியவைகளைக் கற்றுக்கொண்டு தர்மசிந்தை யில்லாமல் பொருளையே பெரிதாக எண்ணிக்கொண்டு ஹேதுவாதம் செய்தும் பெரியோர்களை அதிக்ஷேபம் செய்து கொண்டும் இருந்து நரிஜன்ம மெடுத்துத் தபிக்கிறேன். இனி மனிதனாய்ப்பிறந்தால் நல்ல தர்மங்களையே தேடுவேன். நீ எழுந்து கரணங்களுக்குச் சக்தி இருக்கையிலேயே ஸ்திரமான தர்மத்தைத்தேடிக்கொள்ளு' என்றது. காச்யபனும் அதைக்கேட்டு ஆச்சரியத்துடன் எழுந்ததும் இந்திரன் நிஜரூபத்தைக் காட்டினான். ஆச்சரியமடைந்த ருஷிகுமாரன் பிறகு தர்மானுஷ்டானஞ்செய்து சௌக்கியத்தை யடைந்தான். நாமும் பொருள் தேடுவதுமாத்திரம் பெரிதா யெண்ணமல், தர்மத்தையும் ப்ரதானமாய்த்தேடவேண்டுவது கடமை என்று இதனால் விளங்குகிறது.

---

1. इन्द्रस्याशुचिशूकरस्य च सुखे दुःखे च नास्त्यन्तरं स्वेच्छाकल्पनया तयोः खलु सुधा विष्ठा च काम्याशनम्। रम्भा चाशुचिशूकरी च परमप्रेमास्पदं मृत्युतः संत्रासोऽपि समः स्वकर्मगतिभिः स्वान्योन्यभावः समः॥

## ஜீவன்களும் மோக்ஷமும்.

(ஸ்ரீ. உ. வே. க்ருஷ்ணமாசாரியர்.)

### சார்வாகமதம்.

(முன்தொடர்ச்சி.)

தேகம் நாசத்தை யடையும்போது அந்த ஆத்மாவும் நாசத்தை யடைகின்றது. தேகம் நாசத்தை யடைந்த பிறகும் அந்த ஆத்மா ஸ்திரமாயிருக்கிறது என்பதற்கு ஒன்றும் ப்ரமாணம் இல்லையே. ஆத்மா ஸ்திரமென்றும்



அந்த ஆத்மாவானது தேகம் நாசத்தை யடைந்தபிறகு அந்தத் தேகத்தை விட்டுவிட்டு வேறுதேகத்தை யடைகிற தென்று ஒப்புக்கொண்டால், பால்ய தேகத்தை விட்டு 'யௌவன தேகத்தில் ப்ரவேசித்த ஆத்மாவுக்குப் பால்யத்தில் செய்த காரியங்கள் ஞாபகத்திற்கு வருகிறமாதிரி புதியதேகத்தில் ப்ரவேசித்ததாகச் சொல்லப்படும் ஆத்மாவுக்கு முன்ஜன்மத்தில் செய்த காரியங்களெல்லாம் ஞாபகத்திற்கு வரவேண்டுமே! அனுபவத்திலோ காணோம். தேகம் வேறு என்பதும் ஆத்மா ஒன்றே என்பதும் பால்ய யௌவனாவஸ்தைகளுக்கும் பூர்வா பரஜந்மங்களுக்கும் ஸமமாயிருக்க, பால்யத்தில் செய்த காரியங்கள்தான் ஞாபகத்திற்கு வருகின்றன. பூர்வஜந்மத்தில் செய்த காரியங்கள் ஞாபகத்திற்கு வருகிறதில்லையே. ஆகையால் ஆத்மா நித்யமென்பதும் அந்த ஆத்மாவானது பரலோகத்தில் தான்செய்த கர்மங்களின் பலன்களை யனுபவிக்கிற தென்பதும் வீணான வார்த்தைகளே தவிர நம்பத்தகுந்தவைகளல்ல.

ஆகையால் 1. உயிரோடிருக்கும் வரையில் சுகமாயிருக்க வேண்டியது. அதற்காக என்ன காரியங்கள் வேணுமானாலும் செய்யலாம். மரணமென்பது எல்லோருக்கும் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதினின்றும் தப்பித்துக் கொள்ள ஒருவராலும் முடியாது. தேகமானது சாம்பலானபிறகு 'சுகத்தை யனுபவிப்பதற்குத் தேகம்வேணுமே' என்றால் மறுபடி திரும்பிவருமோ?. உயிரோடிருக்கும்போது அநுபவிக்கும் சுகங்கள்தான் புருஷார்த்தம். இதைத்தவிர, பரலோகத்தில் வரும்மோக்ஷம் புருஷார்த்தம் என்று சொல்லுவதெல்லாம் விஷயங்களை யுள்ளபடி அறிந்துகொள்ளாமல் பிதற்றுவதாகும்.

இவ்வுலகத்தில் உண்டாகும் சுகங்களெல்லாம் துக்கத்துடன் கலந்துவருவதால் இந்தச்சுகங்கள் புருஷார்த்தமல்ல என்று சந்தேகப்படக் கூடாது. சுகங்களுடன் துக்கங்கள்வந்தால் அவைகளைத்தடுக்க முயற்சி செய்யவேண்டும். தானியக்கதிர் அறுக்கும்போது நெல்லுடன் பதர் வந்தாலும் பதரைத் தள்ளிவிட்டு நெல்லைமாத்திரம் எடுத்துக்கொள்வதுபோலத் துக்கங்களைத் தள்ளிவிட்டுச் சுகத்தைமாத்திரம் அனுபவிக்கவேண்டும். மாடுகள் மேய்ந்து விடுமேஎன்று கழனிகளில் விதைவிதைக்காமல் இருக்கலாமா? விருந்தாளிகள் வந்துவிடுவார்கள் என்று உலைவைக்காமல் இருக்கமுடியுமோ. ஆகையால் துக்கங்களுடன் கூடியவை என்று, வருகிற சுகங்களை யனுபவிக்காதவன் பசுக்களைப்போல் மூடனாவான். மேலும் இடையிடையே வருந்துக்கங்களை அனுபவித்துவிட்டுப் பிறகு சுகங்களை யநுபவித்தால் தான் மிகவும் ஆனந்தம் உண்டாகும். வெய்யிலில் அடிபட்டவருக்கல்லவோ நிழலால் உண்டாகும் ஆனந்தத்தின் அருமைதெரியும்.

---

(1) यावज्जीवं सुखं जीवेन्नास्ति मृत्योरगोचरः।
भस्मीभूतस्य देहस्य पुनरागमनं कुतः॥

ஆகையால் பரலோகமும் அவ்விடத்திய சுகங்களும் இல்லாமையால் அவைகளுக்காக 'அநேக த்ரவ்யங்களைச் செலவழித்தும், தானும் தேஹச்ரமத்தை மிகவடைந்தும், பிறரை ச்ரமப்படுத்தியும் செய்யும்யாகம் முதலான கர்மங்கள் வீண்தான். ஜீவனம் செய்வதற்கு வழிதெரியாமல் வேதம் என்று ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு அதில் சொல்லப்பட்டிருக்கின்றன வென்று கர்மங்களைச்செய்வித்துத் தனிகர்களை ஏமாற்றிப் பணத்தை அபகரிப்பதற்காகச் சில துஷ்டர்கள் ப்ரயத்னப்பட்டிருக்கிறார்கள்

அவர்கள் சொல்வது சரியல்லவென்பதை அவர்களைக்கொண்டே நாம் தெரிந்துகொள்ளலாம். கர்ம காண்டத்தைப் படித்தவர்கள் "கர்மங்களால் உண்டாகும் ஸ்வர்க்கம் முதலானவைகள்தான் புருஷார்த்தம். மந்திரங்கள்தான் தேவதைகள்" என்று சொல்லி, ஜ்ஞாநகாண்டத்தில் சொல்லும் உபாஸநாதிகளைத் தூஷித்தும், ஜ்ஞாநகாண்டத்தைப் படித்தவர்கள் "மோக்ஷம்தான் பரமபுருஷார்த்தம், உபாஸநாதிகள்தான் அதற்கு ஸாதகங்கள், கர்மகாண்டத்தில் சொல்லப்பட்ட கர்மங்கள் அஸ்திரமான பலனைக் கொடுக்கின்றன ஆகையால் அவை ஆதரிக்கத் தகுந்தவைகளல்ல" என்றும் ஒருவர்க்கொருவர் நிராகரணம் செய்கிறார்கள்.

ஆகையால் * அக்நிஹோத்ர முதலிய கர்மங்களும், வேதங்களும், ஸந்யாஸமும், புத்திபௌருஷங்கள் இல்லாதவர்கள் தங்களுடைய ஜீவனத்திற்காக ஏற்படுத்திக்கொண்டவைகள். யாகங்களில் கொல்லப்படும் பசுக்களுக்கு ஸ்வர்க்கம் வருகிறதென்று சொல்வதும், பாமர ஜநங்களை ஏமாற்றுவதற்காகச் சொல்லும் வார்த்தை. அப்படி யாகத்தில் கொல்லப்படும் பசுக்களுக்கு ஸ்வர்க்கம் வருவது உண்மையாயிருந்தால் தேக ஸம்பந்த மில்லாமலும் விவேகமில்லாததுமான பசுவுக்கு ஸ்வர்க்கத்தைச் சம்பாதித்துக் கொடுக்கும் தயாளு சிரோமணியாகிய இந்த யஜமானன் தன்னைப் பெற்றுவளர்த்தவனும் சாஸ்திரங்களைப் படித்தவனுமாகிய தன் தகப்பனை யாகத்தில் பசுவாக வைத்து வதம் செய்து அவனுக்கு ஸ்வர்க்கம் ஸம்பாதித்துக்கொடுத்தால் மிகவும் க்ருதஜ்ஞதையுள்ளவனென்று கருதப்படுவானே! தகப்பன் செய்த உபகாரத்தைக் கொஞ்சமாவது நினைத்து அவனுக்கு இந்த ப்ரத்யுபகாரம் செய்யக்கூடாதா? அதேமாதிரி இவ்வுலகத்தில் செய்யும் ச்ராத்தம் இறந்துபோனவர்களுக்குப்

* அக்நிஹோத்ரம் த்ரயோ வேதா: த்ரிதண்டம் பஸ்மகுண்டநம் ।
புத்திபௌருஷஹீநாநாம் ஜீவிகேதி ப்ருஹஸ்பதி: ॥
பசுச்சேந்நிஹத: ஸ்வர்கம் ஜ்யோதிஷ்டோமே கமிஷ்யதி ।
ஸ்வபிதா யஜமாநேந தத்ர கஸ்மாந்ந ஹந்யதே ॥

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீக்ருஷ்ணாய பரமாத்மநே நம: ॥

॥ புரஞ்ஜநோபாக்யாநம் ॥

[ ஸ்ரீபாகவதே, சதுர்த்தஸ்கந்தே, 25, 26, 27, 28, அத்யாயா: ]

நாரத உவாச —

போ! போ! ப்ரஜாபதே ராஜந்! பசூந் பச்ய த்வயாத்வரே ।
ஸம்ஜ்ஞாபிதாந் ஜீவஸங்காந் நிர்க்ருணேந ஸஹஸ்ரச: ॥ 7
ஏதே த்வாம் ஸம்ப்ரதீக்ஷந்தே ஸ்மரந்தோ வைசஸம் தவ ।
ஸம்பரேதம் அய:கூடைச் சிந்தந்த்யுத்திதமந்யவ: ॥ 8

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகாய நம: ॥

186738

# புரஞ்ஜநோபாக்யானம்.

[ஸ்ரீமத் பாகவதம், நான்காவது ஸ்கந்தம், 25, 26, 27, 28 - ம் அத்யாயங்கள்.]

[ அந்யாபதேசார்த்தமும் ஸ்வாபதேசார்த்தமும். ]

1867

நாரதர் சொல்லுகிறார் —

ப்ரஜைகளுக்கு எல்லாம் யஜமானனாகிய ஓ! ராஜாவே! தயையில்லாத உன்னால் ஆயிரக்கணக்காக யஜ்ஞத்தில் கொல்லப்பட்ட பசுக்களாகிய ஜீவர்களின் கூட்டங்களைப்பார்! இவைகள் உன்னால் செய்யப்பட்ட கொலையை நினைத்துக்கொண்டவைகளாய் உன்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன. நீ மரணமடைந்த பிறகு வ்ருத்தி அடைந்த கோபமுடையவைகளாய் இரும்பினால் செய்யப்பட்ட நுனிகளை உடைய கொம்பினால் உன்னைப் பிளக்கப்போகின்றன.

## அவதாரிகை.

ப்ராசீன பர்ஹிஸ் என்கிற ஒரு ராஜா மிகுந்த தர்மிஷ்டனாய் யஜ்ஞம் முதலியவைகளை இடைவிடாமல் அநுஷ்டித்துக் கொண்டுவந்த போதிலும் தத்வஜ்ஞானத்தில் ச்ரத்தை இல்லாதவனாய் இருப்பதைப்பார்த்து அவனிடத்தில் விசேஷக்ருபையோடு கூடிய நாரதர் அந்த ராஜாவுக்குத் தத்வஜ்ஞானத்தில் ச்ரத்தையை உண்டாக்கி அதின் வழியாக மோக்ஷமாகிய பரமபலத்தை அடையவேண்டுமென்கிற ஆசையை அவனுக்கு உண்டாக்குவ

தற்காக இந்த உபாக்யானத்தை உபதேசம் செய்ய ஆரம்பித்து, அதில் நேராகவே தத்வத்தை உபதேசம் செய்கிறேன் என்னில் அவனுக்குத் தத்வ ஜ்ஞானத்தைப்பற்றிய ஆவல் இல்லாமையினுல் அலக்ஷ்யம் செய்து விடுவான் என்று நினைத்து, அவனுல் இதுவரையிலும் செய்யப்பட்டுவந்த கேவல யஜ்ஞங்களில் ஏதோ ஒருவிதமான வழியினுல் அச்ரத்தையை உண்டுபண்ணி, அதன்வழியாகத் தத்வஜ்ஞானத்தில் ஆசையை உண்டாக்குவதற்காக அவனுல் யஜ்ஞங்களில் கொல்லப்பட்ட பசுக்களைத் தன்னுடைய தபோமஹிமையினுல் அவனுக்கு ப்ரத்யக்ஷமாகக் காண்பித்து அவனுக்கு உபதேசம் செய்கிருர்.

பகவானுடைய ஸ்வரூபத்தை உள்ளபடி அறியாமல் கேவல கர்மங்களை அனுஷ்டிப்பது அல்பபலங்களை மட்டும் ஸாதித்துக் கொள்ளுவதற்குக் காரணமாகும் என்பதும், தத்வஜ்ஞானம் இல்லாமல் அனுஷ்டிக்கப் படுகிறபடியினுல் அநிஷ்டபலத்தையே கொடுக்கும் என்பதும், பகவானே ஸர்வ யஜ்ஞாதிகளினுலும் ஆராதிக்கப்படுமவன், அவனுடைய ஸ்தானமாகிய பரமபதத்தை அடைவதே இந்த ஜீவாத்மாவிற்கு பரமச்ரேயஸ்ஸு, அதைத்தவிர மற்ற எல்லாப் புருஷார்த்தங்களும் நசிக்கக் கூடியவைகள், அப்படி அந்த மோக்ஷத்தை அடைவதற்கு ஆசார்ய அனுக்ரஹமே முக்யமான ஸாதனம் என்பதும் இந்த உபாக்யானத்தில் வெளியிடப்படுகிறது. இந்த அத்யாயங்களில் ஒரு ராஜாவின் கதையைச் சொல்லுகிறது என்கிற ஒரு வ்யாஜத்தை வைத்துக்கொண்டு கீழ்ச்சொல்லிய தத்வார்த்தங்களை அந்யாபதேசமாக நாரதர் சொல்லுகிருர் என்பது 29 - ம் அத்யாயத்தில் சுகமஹர்ஷிதாமே சொல்லி இருக்கிருர். இதில் ஶ்லோகங்களுக்கு அந்யாபதேசம் ஸ்வாபதேசம் என்கிற இரண்டுவிதமான அர்த்தங்களுண்டு. அந்யாபதேசத்தில் கேவலம் ஒரு ராஜாவினுடைய கதையும் ஸ்வாபதேசத்தில் தத்வார்த்த ப்ரகாசகமாய் இருக்கும்படியும் மேலே நிரூபிக்கப்படும். அந்யாபதேசம் என்பது சொல்லப்பட வேண்டியதாக ஆரம்பிக்கப்பட்ட அர்த்தத்தை நேரில் சொல்லாமல் மறைவாய் வேறு விதமாகச் சொல்லுவது. ஸ்வாபதேசம் என்பது அப்படிச் சொல்லப்பட்டதின் வாஸ்தவமான அபிப்ராயத்தை நிரூபிப்பது. இந்த இரண்டுவித அர்த்தங்களை எல்லோரும் எளிதில் அறியும்பொருட்டு ஶ்லோகங்களுக்கு அர்த்தம் விஸ்தாரமாகத் தமிழில் இங்கு எழுதப்படுகிறது.

[ஸ்வாபதேசார்த்தம்] இந்தஇரண்டு ச்லோகங்களினுலும் யஜ்ஞங்களை நிந்தித்தது போல் தோன்றினுலும் இங்கு அவற்றை நிந்திப்பதில் தாத்பர்யம் இல்லை. பின்னை எது வென்னில் :—தத்வஜ்ஞான பூர்வகமாகச் செய்யப்படாத யஜ்ஞங்கள் நிஷ்ப்ரயோஜனங்கள், தத்வஜ்ஞான பூர்வகமாக அனுஷ்டிக்கப்பட்



ஸ த்வம் தே கதயிஷ்யாமி இதிஹாஸம் புராதநம் ।
புரஞ்ஜநஸ்ய சரிதம் நிபோத கததோ மம ॥ 9
ஆஸீத் புரஞ்ஜநோ நாம ராஜா ராஜந்! ப்ருஹச்ச்ரவா: ।
தஸ்யாவிஜ்ஞாத நாமாஸீத் ஸகா அவிஜ்ஞாத சேஷ்டித: ॥ 10

இந்த விஷயத்தைப்பற்றி நான் முற்காலத்தில் நடந்த இதிஹாஸமாகிய புரஞ்ஜனனுடைய சரித்திரத்தைச் சொல்லுகிறேன். நான் சொல்லும்பொழுது நீ அதை ஸாவதானமாகக் கேள். 9

ஓ! ராஜாவே! மிகுந்த கீர்த்தியை உடையவனுன புரஞ்ஜனன் என்று பெயருடைய ஒரு ராஜா இருந்தான். அவனுக்கு அவனுல் அறிந்துகொள்ளப்படாத பெயரை உடையவனுப், ப்ரஸித்தமான கார்யங்களை உடையவனுகிய ஒரு ஸ்நேஹிதன் இருந்தான். 10

டாலும் அவைமோக்ஷஸாதனமாகாது, தத்வஜ்ஞானமே எல்லாவற்றையும்விட சிறந்தது, 1 'த்ரவ்யங்களைச் செலவழித்துச்செய்யும் யஜ்ஞங்களைக்காட்டிலும் அதாவது கர்மங்களை அனுஷ்டிக்கும்பொழுது பணங்களைச் செலவழித்துச் செய்வதைப் பார்க்கிலும் அதற்கு உள்ளடங்கிய தத்வஜ்ஞானமே முக்யம்', யஜ்ஞம் முதலிய ஸத்கர்மங்களில் தத்வஜ்ஞானம் என்ருெரு பாகமும், பணங்களைச் செலவழித்து தேஹ ச்ரமாதிகளைப் பொறுத்துக் கொள்ளுவதாகிய க்ரியாபாகம் என்ருெரு பாகமும் இருக்கின்றன, இவைகளுக்குள் க்ரியாபாகத்தைவிட ஜ்ஞான பாகமே விசேஷமானது என்பதே இங்கு நஹி நிந்தா ந்யாயத்தினுல் தெரிவிக்கப்படுகிறது. மேலும் அந்த ராஜா விசேஷமான ச்ரத்தையை வைத்திருக்கும் க்ரியாபாகங்களில் அவனுடைய ச்ரத்தையைக் குறையும்படிசெய்து அந்தப் பாகத்தைக்காட்டிலும் விசேஷமான மஹிமையை உடைய ஜ்ஞான பாகத்தில் ச்ரத்தையை உண்டாக்குவதற்காக இப்படி நிருபிக்கப்பட்டிருக்கிறதே யொழிய வேதப்ரதிபாதிதங்களான யஜ்ஞங்களை நிந்திப்பதில் தாத்பர்யம் இல்லை என்றறியத்தக்கது. 7 8

[ஸ்வா] புரம் என்று பெயருடையதான ஶரீரத்தைத் தன்னுடைய கர்மங்களினுல் உண்டுபண்ணிக் கொள்ளுகிறவனுகையினுல் ஜீவாத்மா இங்கு புரஞ்ஜனன் என்னப்படுகிருன். இதுமேல் இருபத்தொன்பதாவது அத்யாயத்தில் 2 'ஜீவாத்மாவைப் புரஞ்ஜனன் என்று அறிந்துகொள்ளவேண்டும்' என்பதினுல் வ்யக்தமாக்கப்படுகிறது. 3 'இந்த ப்ரும்ம புரமாகிற சரீரத்தில் ஸூக்ஷ்ம

1. கீதை. ச்ரேயாந் த்ரவ்யமயாத் யஜ்ஞாத் ஜ்ஞானயஜ்ஞ: பரந்தப ।
2. புருஷம் புரஞ்ஜநம் வித்யாத் ।
3. அயமேவ ப்ரஹ்ம புரம் புண்டரீகம் வேஶ்ம ।

மான தாமரைப் புஷ்பம்போன்ற எந்த இடம்இருக்கிறதோ’ என்று ஶ்ருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. 3 ‘புரம் என்று சொல்லப்படுகிற சரீரத்தில் வஸிப்பதினால் விஷ்ணு புருஷன் என்னப்படுகிறான்’ இத்யாதிகளும் இங்கு அநுஸந்திக்கத்தக்கவை. இப்படிப்பட்ட சரீரங்களை இந்த ஜீவாத்மா தன்னுடைய கர்மங்களினால் தானே ஸம்பாதித்துக் கொள்ளுகிறான் என்பதும் 1 ‘ஓ! மஹர்ஷியே! என்னால் ஸ்ருஷ்டிக்கப்படுகிற இந்த ப்ராணிகள் தங்களுடைய கர்மங்களாகிற சக்தியினால் தேவன் மனுஷ்யன் முதலிய வஸ்துக்களாய் இருக்கையை அடைகின்றன’ என்றல்லவோ ப்ரமாணங்கள் சொல்லுகின்றன என்றபடி. அந்த ஜீவாத்மாவின் பரிசுத்தமான ஸ்வரூபத்தை நிரூபிக்கிறது. வ்யூஹத்வா: ’என்று. ஸ்வபாவத்தில் 2 ‘அவனுடைய கீர்த்தியை ஜ்ஞானஸ்ரூபன், ஆநந்தஸ்வரூபன்’ என்று ப்ரமாணங்கள் சொல்லுகின்றன என்றபடி. 3 ‘கர்மஸம்பந்தமில்லாதவன், கிழத்தனம் மரணம் இல்லாதவன், துக்கம் பசிதாகம் இல்லாதவன், அழிவில்லாத குணங்களை உடையவன், தன்னுடைய ஸங்கல்பத்திற்கு ஒருவிதத் தடையுமில்லாதவன்’ என்று பகவானைப்போல எட்டுக் குணங்களை உடையவனாக அல்லவோ சொல்லப்படுகிறான். அவனுக்கு ஸுஹ்ருத்தாவது பகவான், 4 ‘எல்லா ப்ராணிகளுக்கும் என்னை ஸுஹ்ருத்தாக நினைத்தாயாகில் சாந்தியை அடைவாய்’ என்று ஸ்ரீ கீதையிலும், 5 ‘ஸ்நேகிதர்களாகிய இரண்டு பக்ஷிகள் ஒன்றுசேர்ந்திருக்கின்றன’ என்று ஶ்ருதியிலும் பகவானை ஸர்வாத்மாக்களுக்கும் ஸ்நேஹிதனாகவல்லவோ சொல்லியிருக்கிறது. இவ்வர்த்தம் மேலே 29-ம் அத்யாயத்தில் 6 ‘அவிஜ்ஞாதா என்று சொல்லப்பட்டவன் ஜீவாத்மாவுக்கு ஸ்நேகிதனாகிய பகவான்’ என்று ஸ்பஷ்டமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது, அவிஜ்ஞாத நாமா-அவனுடைய பெயரே இவனால் அறியப்படவில்லை, அப்படியே அறியப்படாத சேஷ்டைகளை உடைய

3. புரஸம்ஜ்ஞே ஶரீரே஽ஸ்மிந் ஶயநாத் புருஷோ ஹரி: |
1. நீயதே தவ தாம ஶ்ரேஷ்ட ஸ்வஸ்ருஷ்ட்யா வஸ்து வஸ்துதாம் |
2. ஜ்ஞாநாநந்த ஸ்வரூபஸ்ய |
3. அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப: |
4. ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ஜ்ஞாத்வா மாம் ஶாந்திம்ருச்சதி |
5. த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா |
6. யோऽவிஜ்ஞாதா ஹ்ருதஸ்தஸ்ய ப்ராணஸ்ய ஸர்வேஶ்வர: |



ஸோऽந்விஷ்யமாண: ஶரணம் பஹ்வாட ப்ருதிவீம் ப்ரபு: |
நாநுரூபம் யதாऽவிந்தத³பூத் ஸ விமநா இவ || 11

அந்த ராஜா தனக்கு இருப்பிடமாகிய ஒருபட்டணத்தை விரும்பினவனாய் பூமிமுற்றிலும் சுற்றிவந்தான், எதுவரையில் தனக்குத் தகுதியான ஒரு பட்டணத்தை அடையவில்லையோ அப்பொழுது துக்கப்பட்டுக் கொண்டவனாகவே இருந்தான். 11

வன். அதாவது இப்படித் தனக்கு ஸுஹ்ருத்தாக இருக்கும் பகவானுடைய குணநாமாதிகளை ஒரு தடவையும் நினைத்ததில்லை. அன்றிக்கே அவிஜ்ஞாதா என்று பெயருடையவன். ‘அவிஜ்ஞாதா ஸஹஸ்ராம்ஶு:’ என்று ஸ்ரீஸஹஸ்ரநாமத்தில் அவன் திருநாமம் படிக்கப்பட்டிருக்கிறது. ஆயிரம் திருநாமங்கள் இருக்க இந்தத் திருநாமத்தை இங்கு எடுத்திருப்பதற்குக் காரணம் அவன்ஸர்வ ஜனங்களுக்கும் ஸுஹ்ருத்தாயிருப்பதற்குக் காரணத்தை இந்தத் திருநாமம் ப்ரகாசம் செய்கிறபடியினால் என்றறியத்தக்கது. தன் ஆஸ்ரிதர்களை தனக்கு ஸத்ருஶர்களாக எண்ணிக்கொண்டு அவர்களுக்கு நன்மையை விரும்பிக்கொண்டவனாய் மிகுந்த கருணைக்குப் பரவசப்பட்டவனாய் ஆஸ்ரயித்தவருடைய தோஷங்களை அறிவதில்லை என்று ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் வ்யாக்யானம் செய்யப்பட்டபடி தோஷங்களைப் பார்த்து அவர்களை விட்டுவிடாமல் அவர்களுக்கு நன்மையை விரும்பிக்கொண்டிருப்பவனாகையினால் அவன் எல்லோருக்கும் ஸுஹ்ருத்தாகிறான் என்றபடி. ‘ஸஹஸ்ராம்ஶு:’ என்று சொல்லுகிறபடியே அவன் ஸர்வஜ்ஞனாயிருந்த போதிலும் ஆச்ரிதர்களுடைய அபராதங்கள் விஷயத்தில் அதைத்தெரிந்து கொள்ளாதவனைப்போல அந்த அபராதத்தின் கார்யமான சிக்ஷைமுதலியவைகளைச் செய்யாமையினால் அறியாதவன் என்னப்படுகிறான். அவிஜ்ஞாத சேஷ்டித: - அவனுடைய ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்கள் மற்றவர்களினால் அறியப்படாதவைகள். ‘சுரரறிவருநிலை விண்முதல் முழுவதும்’ என்றும், ‘எருத்துக் கொடி உடையானும் பிரமனும் இந்திரனும் மற்றுமொருத்தரும் இப்பிறவியென்னும் நோய்க்கு மருந்தறிவாருமில்லை’ என்றும் சொல்லுகிறபடியே அவனுடைய ஜகத்ஸ்ருஷ்டி மோக்ஷப்ரதானம் முதலிய வ்யாபாரங்கள் ப்ரும்மருத்ராதிகளுக்கும் நிலமல்ல அல்லவா என்றபடி. அன்றிக்கே விஜ்ஞாதசேஷ்டித: - உலகத்தில் ப்ரஸித்தமாய் எல்லோராலும் கண்டறியப்பட்ட உலகங்களை ஸ்ருஷ்டிப்பது முதலிய வ்யாபாரங்களை உடையவன், அதாவது உலகங்களை ஸ்ருஷ்டிப்பது நம்மால் அசக்யமாதலால் ஸர்வஜ்ஞனாகிய பகவான்தன்னாலேயே செய்யப்பட்டிருக்கவேண்டுமென்பது எல்லோராலும் அறியப்பட்டிருக்கிறது என்றபடி. 10

ந ஸாயுஜ்ஜெமெ ந தாஃ ஸவ்ரா ஸ்ருதரெ யாவதீஃ வுரஃ ।
காஜாநு காஜயஜானொஸஸ தஸ்ஸ் தஸ்ராவவத்துயெ ॥ 12

ஸ ஸாகஹா ஹிஜவதொ ஒக்ஷிணெஷ்ய ஸாநுஷு
ஒஜா நவஹிதாவிஜஃ வுரம் ருக்ஷித ருக்ஷணம் ॥ 13

---

காம்யங்களான ஸுகங்களை அனுபவிக்கவேண்டும் என்று விரும்பிக் கொண்டிருந்த அந்த ராஜா அந்த காம்யஸுகங்களின் அனுபவம் கிடைப்பதற்காக பூமியில் எவ்வளவு பட்டணங்கள் இருக்கின்றனவோ அவைகள் ஒன்றையும் நல்லதாக எண்ணவில்லை. 12

அந்த ராஜா ஒரு ஸமயத்தில் ஹிமவத் பர்வதத்தின் தெற்குப் பக்கத்தில் இருக்கும் தாழ்வரையில் ஒன்பது வாசல்களுடன் கூடியதாய் மற்றும் பட்டணங்களுக்கு வேண்டியகோட்டைகள் வீதிகள், அந்தப்புரங்கள் முதலிய

---

[ஸ்வா.] ஒருஹஃ ஸஃ-சரீரம் இந்திரியம் முதலியவைகளை நியமிக்கக்கூடிய அந்த ஜீவாத்மா, ஶரணஜெந்ஷஜாணஃ - தனக்கு இருப்பிடமாகிய ஒரு தேஹத்தை விரும்பினவனாய், வ்ருயிவீம்-இது உபலக்ஷணம், ப்ரும்மாண்டம் முழுவதும் சுற்றிவந்தான். அதாவது தேஹம் இல்லாவிடில் இந்த ஆத்மாவுக்கு ஸுகத்தை அனுபவிக்க இடம் இல்லாமையினால், அந்தத் தேஹத்திற்குக் காரணங்களான கர்மங்களைச் செய்து கொண்டு, அந்தந்தக் கர்மங்களுக்குத் தக்கபடி பசு ம்ருகம் பக்ஷி முதலிய அனேகவிதமான ஜன்மங்களை அடைந்து ப்ரும்மாவினால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட அண்டத்திற்குள் ஸஞ்சரித்துக் கொண்டுவந்தான் என்றபடி. வஹ்ராஜ - அந்தச் சரீரங்களை அடைந்து அவைகளை ஆத்மாஎன்று ப்ரமித்து நின்றான். சுநாஶ-ஏவம் யஶா நா விநஜ- கொஞ்சம் பகுத்தறிவு தர்மபூதஜ்ஞானத்தின் ப்ரகாசம் இவைகளுக்குக் காரணமாகையினால் தனக்கு முற்றிலும் ஸத்ருசம். இல்லாவிட்டாலும் கொஞ்சம் அனுகுணமான தேவன் மனுஷ்யன் முதலிய சரீரத்தை எது வரையில் அடையவில்லையோ அதுவரையில் அந்த ஜீவாத்மா ஜ்ஞானம் இல்லாதவனைப்போலவே இருந்தான்) அதாவது ஸ்தாவர ஜன்மங்களில் தர்மபூதஜ்ஞானத்திற்கு ப்ரகாசமே இல்லையாதலாலும் பசு பக்ஷி முதலிய ஜன்மங்களில் பகுத்தறிவு முதலிய விசேஷஜ்ஞானம் இல்லாமையினாலும் அந்த சரீரங்கள் ஆத்மாவுக்குத் தகுதி அல்லவாகையினால் தர்மபூத ஜ்ஞானத்திற்கு ப்ரகாசமில்லாமல் அசேதனத்தோடு ஸத்ருசனாகவே இருந்தான். விஜநாஃ ஜவ - ஜ்ஞானம் இல்லாதவனைப்போல, 11



வ்ராகாரொவவநாட்டாரு வஸிவெ ரக்ஷதொரணெஃ। [ஜெஹஃ॥
ஸுணவு ஶளவ்ராயவெஸஃ ஶ்ருஜெஜஃ ஸங்குரூம் ஸவவுதொ ஶ்ரு
நீருஷ்வடிக வெஜரியல் ஜக்காஜரகதாரணெஃ ॥
க்ரூதுஹஜு ஸுஶீம் தீவ்யம் ஶ்ரியா ஹொமவதீஜவ ॥ 15
ஸஹாவசுர ரயொஷி ராகீரஜா யதநாவணெஃ ।
வெசதூ யுஜவதாகாஹி யக்கூம் விதுரஜ வெஜிஹிஃ ॥ 16

---

லக்ஷணங்களை உடையதென்று தன்னால் கண்டறியப்பட்ட ஒருபட்டணத்தைப் பார்த்தான். 13

[கீழ்க் கூறியபட்டணம் எப்படிப்பட்டதென்னில், மூன்று ஶ்லோகங்களினால் அந்தப் பட்டணத்தை வர்ணிக்கிறார்].

மதில்கள், ஜன்னல்கள், வாசற்படிகள், தங்கம் வெள்ளிஇரும்பு இவைகளினால் செய்யப்பட்ட சிகரங்களினால் நிறைந்ததாயும் எல்லாப்பக்கங்களிலும் வீடுகள்நிறைந்ததாயும், நீலமணி, ஸ்படிகம், வைடூர்யம், முத்துக்கள், மரகதப்பச்சைகள், சிவப்புக் கற்கள், இவைகளினால் செய்யப்பட்ட மெத்தைகளை உடையதாயும், ஸம்பத்தினால் போகவதீ என்கிற நாக பட்டணம்போல்

---

[ஸ்வா.] காஜாநு காஜயஜாநஃ சுஸஸ-இஹலோகத்தில் காம்யஸுகங்களை, அதாவது சப்தம்முதலிய விஷயங்களை அனுபவிப்பதினால் உண்டான ஸுகங்களைவிரும்பிக்கொண்டிருக்கிற இந்த ஜீவாத்மா. அப்படித்தான் விரும்பின வெளி இந்திரியங்களினால் அனுபவிக்கக்கூடிய ஸுகங்களை அனுபவிப்பதற்கு இந்த உலகங்களில் இருக்கிற பசு, பக்ஷி, ம்ருகாதிகளான எந்தச் சரீரங்களையும் தகுதியுள்ளவைகளாக நினைக்கவில்லை. 12

[ஸ்வா.] இந்த ஜீவாத்மா, ஸகஹா-'அனேகமாயிரம் ஜன்மங்கள் எடுத்துக் கொண்டு வருகையில், 'அனேகப் புண்யங்களினால் இந்தமனுஷ்ய சரீரம் என்கிற தெப்பம் வாங்கப்பட்டது. என்று சொல்லுகிறபடியே விசேஷமான புண்யகர்மங்கள் ஒன்று சேர்ந்துபலிக்கும் ஸமயத்தில் ஹிமவத்பர்வதத்திற்குத் தென் பார்ஶ்வத்திலிருக்கும் பாரதவர்ஷத்தில், நவஹிதாஹிஜஃ - ஒன்பது த்வாரங்களுடன், இவனுடைய தர்மபூதஜ்ஞானம் இவைகளின் வழியாக வெளியில் புறப்பட்டு ஸுகதுக்கங்களை அறிகிறபடியினால் இந்திரியங்கள் த்வாரங்கள் என்று இங்கு சொல்லப்படுகின்றன. 'ஊனிடைச்சுவர் வைத்து என்பு தூண்நாட்டி உரோம மேய்ந் தொன்பது வாசல் தூனுடைக் குரம்பை' என்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறது. 1. 'ஒன்பதுத்வாரங்களைஉடைய புரம்என்று சொல்லப்படுகிற சரீரம்' என்று பகவத்கீதையிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

---

1. கீதை. நவஜாரெஶவெஶ.

புர்யாஸ்து பாஹ்யோபவநே திவ்யத்ருமலதாகுலே ।
நதத்விஹங்காலிகுலகோலாஹலஜலாஶயே ॥ 17
ஹிமநிர்ஜரவிப்ருஷ்மத்குஸுமாகரவாயுநா ।
சலத்ப்ரவாலவிடபநலிநீதடஸம்பதி ॥ 18
நாநாரண்யம்ருகவ்ராதைரநாபாதே முநிவ்ரதை: ।
ஆஹூதம் மந்யதே பாந்தோ யத்ர கோகிலகூஜிதை: ॥ 19

---

இருப்பதாயும், ஸபாமண்டபங்கள், நல்சந்திகள், தெருக்கள், விளையாடும் இடங்கள், குடியிருக்கும் இடங்கள், கடைத்தெருவுகள், பவழங்களால் செய்யப்பட்ட மேடைகளோடுகூடிய ஜனங்கள் தங்கும் இடங்களில் கட்டப்பட்ட கொடிகள் இவைகளால் அலங்கரிக்கப்பட்டதாயும் இருக்கிற அந்தப்பட்டணத்தைப்பார்த்தான். 14—16

[மேல்மூன்று ஶ்லோகங்களினால் இப்பட்டணத்தில் இருக்கும் உத்யான வனங்களை நிரூபிக்கிறார்.]

சிறந்தவைகளான மரம் கொடி இவைகளினால் சிறந்ததாயும், சப்தித்துக்கொண்டிருக்கிற பக்ஷிகள் வண்டுகள் இவைகளின் கோலாஹலத்தை உடைய குளங்களை உடையதாயும், குளிர்ந்த மலைஅருவிகளோடு சேர்ந்துவருகிற புஷ்பங்களுடைய வாஸனையோடு சேர்ந்த காற்றினால் அசைந்து கொண்டிருக்கிற துளிர்களைஉடைய மரங்களால் சுற்றப்பட்ட தாமரைக் குளங்களைஉடையதாயும், காட்டில் ஸஞ்சரிக்கும் அனேகம் விதங்களான ம்ருகங்களினாலும், ரிஷிக்கூட்டங்களினாலும் நிறைந்ததாயும், எந்த வனத்தில் குயில்கள் கூப்பிடுவதைக் கேட்ட வழிப்போக்கன் தன்னை யாரோ கூப்பிடுவதாக நினைக்கிறானோ அப்படிப்பட்டதாயும் இருக்கிற அந்த உத்யானவனத்தில் 17—19

---

ஒன்பது த்வாரங்களாவன:—இரண்டுகண்கள், இரண்டுகாதுகள், மூக்கின் த்வாரங்கள் இரண்டு, வாய், பாயு, உபஸ்தம் என்னப்படும் இரண்டு, என்பவை. லக்ஷித லக்ஷணம் - இப்படிப்பட்ட சரீரத்திற்கு வேண்டிய எல்லா லக்ஷணங்களையும் உடையதான என்றபடி, இத்தால் நொண்டி, ஊமை, முடம், செவிடுமுதலிய ஒருவிதத் தோஷமுமில்லாத சரீரம் சொல்லப்படுகிறது. 13

[ஸ்வா.] சரீரத்தில் இருக்கும் சதை மாம்ஸம் முதலியவைகளே இங்கு மதிள்முதலியவைகளாக நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. இந்திரியங்களை ஜன்னல்களாகவும், வெளுத்ததாயும் சிவந்ததாயும், கறுத்ததாயும் இருக்கிற ஸத்வரஜஸ்தமோ குணங்களை சிகரங்களாகவும், ஹ்ருதயகமலத்திலிருந்து புறப்படும் அனேக வர்ணங்களை உடைய நாடிகளை மெத்தைகளாகவும் நிரூபித்திருக்கிறது. 14—16



தேப்ய: ஸர்வேப்யோऽப்யதிஶயிதோத்கர்ஷவத்த்வமித்யர்த: । யத்வா ஸர்வேப்ய: ஶ்ரேஷ்டேப்ய: ஶ்ரேஷ்டதர இத்யர்த: । ஸதா ஹ்ருதி ஸ்திதம் பராத்பரம் யதிதி ப்ருதக்வாக்யம் । தத்ர யச்சப்த: ஸாமாந்யேந வஸ்துவாசகோ பவதி, அந்யதா லிங்கவிரோதாத் । ததேவம்பூதம் விஷ்ணும் தத்த்வவாசகேந ஸ்வரப்ராதாந்யதயா ஸ்வரஶப்தநிர்திஷ்டேந ப்ரணவாக்யேந மந்த்ரேண யோ மஹாத்மா த்யாயதி ஸ பகவத்ப்ராப்திவிரோதிப்ய: பாபேப்யோ முச்யத இதி வாக்யஶேஷார்த: । ஸ்வரப்ராதாந்யதயா ஸ்வரத்வம் சாம்நாதம்— 'யத்வேதாதௌ ஸ்வர: ப்ரோக்தோ வேதாந்தே ச ப்ரதிஷ்டித:'—இதி । ஏகாயநப்ராஹ்மணே ச 'ஓகார: ஸ்வர: மகாரோ வ்யஞ்ஜநம் ய: ஸ்வர: ஸா ப்ரக்ருதி:' இதி ஸ்வரப்ராதாந்யமேவோக்தம் । அயமத்ர விதயர்த:—ஸர்வபாபமோக்ஷகாம: ஊர்த்வபுண்ட்ரசக்ராதிதாரீ ப்ரணவேந ப்ரதிபாதகேந விஷ்ணும் த்யாயேத்—இதி । யோ மஹாத்மா ஸ

---

அன்றிக்கே பெரிய வஸ்துக்கள் எல்லாவற்றைக் காட்டிலும் பெரியவன் என்றர்த்தமாகவுமாம். எப்பொழுதும் மனதிலேயே இருக்கிற பராத்பரமாகிய வஸ்து எதுவோ என்று தனித்து ஒரு வாக்யம். அப்பொழுது 'யத்' என்கிற பதம் பொதுவாக வஸ்து என்பதைச் சொல்லுகிறது. அப்படிச் சொல்லாவிடில் நபும்ஸகலிங்கமாகச் சொல்லி இருப்பதற்கு விரோதம் வருமாதலால். இப்படிப்பட்டவனாகிய விஷ்ணுவை அவரையே சொல்லுகிறதாயும் ஸ்வரத்தையே முக்யமாக உடையதாகையினாலே ஸ்வரம் என்கிற பதத்தினால் சொல்லப்பட்டதாயும் இருக்கிற ப்ரணவம் என்கிற பெயருடைய மந்திரத்தினால் எந்த மஹாத்மா த்யானம் செய்கிறானோ அவன் பகவானை அடைவதற்கு விரோதிகளான பாபங்களில் இருந்து விடுபடுகிறான் என்று மிகுதி வாக்யத்தின் அர்த்தம். ஸ்வரத்தையே முக்யமாக உடைத்தாயிருப்பதினாலே ஸ்வரம் என்று பெயர் பெற்றதாயிருக்கையும் 'வேதத்தின் முதலில் எந்த ஸ்வரம் சொல்லப்பட்டிருக்கிறதோ, வேதத்தின் கடைசியிலும் வைக்கப்பட்டிருக்கிறதோ' என்று வேதத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஏகாயனஶாகையிலும் 'ஓ என்பது ஸ்வரம், ம் என்பது வ்யஞ்ஜனம், எது ஸ்வரமோ அதுதான் ப்ரதானம்' என்று ஸ்வரமே ப்ரதானம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விதி வாக்யத்திற்கு அர்த்தம் இது—எல்லாப் பாபங்களில் இருந்தும் விடுபட வேண்டும் என்கிற ஆசை உடையவன் திருமண் காப்பு சக்கரம் முதலியவைகளைத் தரித்துக் கொண்டவனாய் விஷ்ணுவைச் சொல்லுகிற ப்ரணவத்தினால் விஷ்ணுவை த்யானம் செய்யவேண்டும்—

𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌦𑌿𑌤𑌿 𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑍇𑌣 𑌵𑌾 𑌯𑍋𑌜𑌨𑌾 । 𑌯𑍋 𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑌿 𑌸 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 𑌇𑌤𑌿 𑌵𑌾 𑌵𑌚𑌨𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌃 । 𑌤𑌥𑌾 𑌋𑌚𑌿 '𑌪𑍍𑌰 𑌤𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣 𑌅𑌬𑍍𑌜𑌵𑌤𑍇' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 । 𑌸𑍍𑌤𑌵𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌸𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌂 𑌤𑍁𑌷𑍍𑌟𑍂𑌷𑍁𑌸𑍍𑌸𑍍𑌤𑍋𑌤𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑌯𑌤𑌿 '𑌵𑌿𑌷𑍍𑌣𑍋' 𑌇𑌤𑌿 । '𑌤𑍇' 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌶𑍇𑌷𑍇𑌣𑌾𑌨𑌿𑌷𑍍𑌟𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌤𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌾𑌪𑌕𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑌸𑌕𑌲𑌾𑌕𑌾𑌰𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌤𑌮𑍍 । 𑌅𑌨𑌿𑌷𑍍𑌟𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌹𑌿 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 𑌲𑌾𑌞𑍍𑌛𑌨𑌧𑌾𑌰𑌣𑌮𑍍 । 𑌅𑌤𑍍𑌰 𑌅𑌬𑍍𑌜𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌶𑌙𑍍𑌖 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—𑌭𑌗𑌵𑌚𑍍𑌚𑌿𑌹𑍍𑌨𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌃, 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍈𑌕𑌕𑌣𑍍𑌠𑍍𑌯𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑌾𑌤𑍍, 𑌅𑌬𑍍𑌜𑌜𑌲𑌜𑌾𑌦𑌿𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑌾𑌂 𑌶𑌙𑍍𑌖𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌪𑌦𑍍𑌮𑌪𑌰𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌨 𑌦𑍋𑌷𑌃, 𑌚𑌕𑍍𑌰𑌾𑌦𑌿𑌵𑌤𑍍 𑌪𑌦𑍍𑌮𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌤𑌚𑍍𑌚𑌿𑌹𑍍𑌨𑌤𑍍𑌵𑍇𑌨 𑌧𑌾𑌰𑌣𑍀𑌯𑌤𑍍𑌵𑌶𑌾𑌸𑌨𑌾𑌤𑍍 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 '𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌗𑌦𑌾𑌪𑌦𑍍𑌮𑌲𑌾𑌞𑍍𑌛𑌨𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌾𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ।

என்று. அதாவது இப்படித் தரித்துக் கொண்ட மஹாத்மா எவனே அவன் விஷ்ணுவை த்யானம் செய்ய வேண்டும் என்ருவது, எவன் இப்படி த்யானம் செய்கிறனே அவன் மஹாத்மா ஆவான் என்ருவது வாக்யத்தை மாற்றிக் கொள்ளவேண்டும். அப்படியே ருக்வேதத்தில் '𑌪𑍍𑌰 𑌤𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣 𑌅𑌬𑍍𑌜𑌵𑌤𑍇' என்ருரம்பிக்கும் மந்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்தோத்திரத்தில் ப்ரீதி உடையவனும் ஸ்தோத்திரம் செய்யத்தக்கவனும் இருக்கிற பகவானை ஸ்தோத்திரம் செய்ய வேண்டும் என்கிற ஆசை உடையவனுய் அந்தப் பகவானை இதைக் கவனிக்கும்படி செய்கிருன்—'விஷ்ணுவே' என்று. '𑌤𑍇' (உன்னுடைய) என்று சொல்லியிருப்பதினுல் அநிஷ்டங்களைப் போக்கடிப்பதற்கும் இஷ்டங்களைக் கொடுப்பதற்கும் வேண்டியவைகளான எல்லா ஸ்வபாவங்களையு முடையவன் என்பது அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது. சிலருடைய அடையாளங்களைத் தரிப்பது அநிஷ்டத்தைப் போக்கடிப்பது முதலிய ப்ரயோஜனங்களுக்காக வல்லவா. இவ்விடத்தில் '𑌅𑌬𑍍𑌜' என்னும் பதத்தினுல் ஶங்கம் சொல்லப் படுகிறது-பகவானுக்குச் சின்னம் அது என்கிற ப்ரஸித்தி இருக்கிறபடியினுலும், மற்ற ஶ்ருதிகளோடு ஸமானமான அர்த்தத்தைச் சொல்ல வேண்டியது என்பதை அனுஸரித்தும் '𑌅𑌬𑍍𑌜', '𑌜𑌲𑌜' என்னும் பதங்கள் ஶங்கத்தைச்சொல்லுவதில் ஒருவித விரோதமுமில்லாமையினுலும். தாமரைப் புஷ்பத்தைச் சொல்லுகிறதென்று சொண்டபோதிலும் ஒரு தோஷமுமில்லை. ஏனெனில் சக்ரம் முதலியவைகளைப் போலத் தாமரைப் புஷ்பமும் பகவானுடைய சின்னமாதலால் அதுவும் தரிக்கத் தக்கது என்று சில ஶாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருப்பதினுலும். அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதும் 'ஆதலால் எப்பொழுதும் சங்கம், சக்ரம், கதை, தாமரைப் புஷ்பம், இவைகளினுல் அடையாளம் செய்யப் பட்டவர்களாய்



'𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑍇' 𑌇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨 𑌧𑍍𑌯𑌾𑌨𑍋𑌪𑌕𑌰𑌣𑌸𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌨𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌰𑌜𑌸𑍍𑌤𑌮𑍋𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌭𑍂𑌤𑌪𑌾𑌪𑌨𑌿𑌬𑌰𑍍𑌹𑌣𑌦𑍍𑌵𑌾𑌰𑍋𑌪𑌕𑌾𑌰𑌕𑌤𑍍𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌪𑌿𑌤𑌮𑍍 । 𑌨𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑌶𑍍𑌚𑌾𑌯𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌶𑌬𑍍𑌦𑌃 𑌶𑍌𑌨𑌕𑌾𑌯𑌨𑍀𑌯𑍇—'𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌮𑌿𑌤𑌿 𑌶𑌬𑍍𑌦𑌃 𑌪𑌾𑌨𑍍𑌤𑌃 𑌕𑌸𑍍𑌯 𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑌂 𑌪𑌾𑌤𑌿 𑌤𑍍𑌰𑌾𑌯𑌤𑍇 𑌵𑍇𑌤𑍍𑌯𑌤𑌃 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂' — 𑌇𑌤𑌿 । 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌚 𑌭𑌗𑌵𑌤𑍍𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌿𑌨𑍋𑌰𑌪𑌿 𑌤𑌯𑍋𑌃 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌮𑍍। 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌙𑍍𑌗𑌤𑍍𑌵𑍇𑌨 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌃 𑌧𑍍𑌯𑌾𑌨𑌫𑌲𑌭𑍂𑌤𑌸𑌂𑌸𑌾𑌰𑌤𑌰𑌣𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍋𑌽𑌪𑌿 𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑍇 𑌨𑌾𑌨𑌨𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌃 । 𑌤𑌤𑌰𑍍𑌤𑌵𑍇—𑌤𑌤𑌰𑍀𑌤𑍁𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌵𑌿𑌪𑌨𑍍𑌯𑌵𑌃 - 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌨𑍍𑌤𑌃, 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌵𑌨𑍍𑌤𑍋 𑌵𑌾, 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑌾 𑌯𑍋𑌗𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌪𑍍𑌰𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯 𑌊𑌯𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨 𑌵𑌾 𑌤𑌤𑌰𑍍𑌤𑌵 𑌇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨 𑌵𑌾𑌨𑍍𑌵𑌯𑌃—'𑌵𑍍𑌯𑌵𑌹𑌿𑌤𑌾𑌶𑍍𑌚' 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌾𑌤𑍍 । 𑌧𑌾𑌰𑌣𑍇 𑌪𑍍𑌰𑌕𑌰𑍍𑌷𑌶𑍍𑌚 𑌲𑌾𑌞𑍍𑌛𑌨𑌸𑍍𑌯 𑌶𑌰𑍀𑌰𑌾𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑌯𑌾 𑌸𑌾𑌵𑌰𑍍𑌕𑌾𑌲𑌿𑌕𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌕𑌰𑍍𑌷𑍇𑌣 𑌤𑌰

இருக்க வேண்டும்' என்கிற ப்ரமாணங்களினுல் மேலே சொல்லப்படப் போகிறது. '𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑍇' என்பதினுல் மற்ற தர்மங்களைப் போல த்யானம் செய்வதற்கு விரோதிகளான ரஜோகுணம் தமோகுணங்கள் வ்ருத்தி அடைவதற்குக் காரணமான பாபத்தைப் போக்கடித்து அதன் வழியாக த்யானத்திற்கு உபகாரம் செய்கிறது என்பது தெரிவிக்கப்பட்டது. "பவித்ரம்' என்கிற ஶப்தம் எதைச் சொல்லுகிறது? எந்தச் சப்தத்தைச் சொல்லுகிறவனை பரிசுத்தம் செய்கிறதோ காப்பாற்றுகிறதோ, ஆதலால் அது பவித்ரம் என்று சொல்லப் படுகிறது' என்று ஏகாயனஶாகையில் பவித்ர ஶப்தத்திற்கு நிருக்தி சொல்லப்பட்டிருக்கிறது. பகவானைச் சேர்ந்தவைகளாகிய சங்கசக்ரங்களுக்கு இப்படிப் பவித்ரமாக இருக்கை யுக்தமாயிருக்கிறது. த்யானத்திற்கு அங்கமாக வேறு ஶ்ருதிகளில் ஏற்பட்டிருப்பதினுல் த்யானத்திற்குப் பலமான ஸம்ஸாரத்தைத் தாண்டுவதாகிய பலத்தைச் சொல்லி இருப்பதும் பொருத்த முடையதுதான். 𑌤𑌤𑌰𑍍𑌤𑌵𑍇—தாண்டுவதற்கு என்றர்த்தம். 𑌵𑌿𑌪𑌨𑍍𑌯𑌵𑌃—ஜ்ஞானத்தை உடையவர்கள் என்ருவது ப்ரகாசத்தை உடையவர்கள் என்ருவது அர்த்தம், அதாவது பண்டிதர்களுக்குள் சிறந்தவர்களான யோகி ஶ்ரேஷ்டர்கள் என்றர்த்தம். '𑌪𑍍𑌰' என்பதற்கு '𑌊𑌯𑌤𑍇' என்பதோடாவது, '𑌤𑌤𑌰𑍍𑌤𑌵𑍇' என்பதோடாவது அந்வயம் சொல்லிக் கொள்ள வேண்டும்,' (ஶ்ருதியில் உபஸர்க்கங்கள்) தூரத்தில் இருந்தாலும் க்ரியா பதத்தோடு அந்வயிக்கும்' என்று சொல்லியிருப்பதினுல். அவைகளைத் தரிப்பதில் '𑌪𑍍𑌰' என்கிற உபஸர்க்கத்தினுல் சொல்லப் படுகிற விஶேஷமாவது எந்தக் காலத்திலும் ஶரீரத்தைவிட்டுப் பிரியாதவைகளாகத்தரிக்கை. ஸம்ஸாரத்தைத் தாண்டுவதில் '𑌪𑍍𑌰' என்கிற உபஸர்க்கத்தினுல் சொல்லப்படுகிற விஶேஷமா

ணம் சாவ⁻நராவ்ருத்திலக்ஷணாத்யந்திகஸ்தைர்யம் | ஏவம் ஶங்க
சக்ரே கேசித்தாரயந்தி | அக்நே வ⁻ந: வரிவணூர்ணா
ஷாயிதோ யஜு வ்ரவதக்ஷரா: வ⁻ராதநா: வரஷ்ஷுய:
வஞ்சாயத்யா⁻யரவாணி தாவகாநி ஷிஹ்ஜாநி வஞ்ஜஸ்வலி
ஹ⁻ஜஶிவரய⁻ஶஹஜஹ்ஜாடஉயுஹ்யர்ஷாவெஷ்ஷ⁻ யாரயந்தி
த்யாஹ—'அக்நேவ⁻ராணா:' இதி | ஸ்ம்ருதேஸ்த்யாயஶேயுா
வ்ருத்தீ ஹவிஷ்யதி | ஏவம் ஶிஷ்டாசார வ்ருஹயுநசாராவஶ்ய
கதுவ்யஶவியாவஸ்ய உஞ்ஜஸ்ய தாத்வயம் | ஜந்ராஹெராயிதர
ணகாஶெர விஷ்ணு ஷிஹ்ஜாநி வக்ராதீநி ஹ⁻ஜஉஜ்ஜாஹிஷ⁻
ஸிஹ்யாஹிதிவியஹ்யுஷு:| தயாயஜு⁻ஷி—'நிவிக்ஷேவஸ⁻ஷணம்'
இத்யாஹி | அஸ்யாயஶயு:—உயெய்ய ஸாஹ⁻ம்-ஸாஹ்வாஶுயெய்,
வாரெ உயெய்ய ஷஷ்ட்யா வா இதி ஸஶாஸ: | தத்ராஹ்யெஸ
ஸாஹ⁻ஹிதி நிஷெயுஶ: | ஸாஹ⁻ஹிதி வ்யஸ்தம் வஷம் வா—
ஷஷ்ட்யெயு ஹிதீயா, ஸ⁻வித்ராஷெஶ்ஹவி வ்யத்யயஸ்யாத⁻

---

வது திரும்பி வராமல் இருக்கும்படி எப்பொழுதும் ஸ்திரமாயிருக்கை. இப்படி சங்கசக்ரங்களைச் சிலர் தரிக்கிறார்கள். பூர்த்தியாக அநுஷ்டிக்கிறவர்களாயும், தர்மத்தை உலகத்தில் பரவச் செய்கிறவர்களாகவும் இருக்கிற இன்னும் சில பழைய காலத்தில் இருந்த மஹரிஷிகளோவெனில், உம்முடைய அடையாளங்களான ஐந்து ஆயுதங்களையும் இரண்டு தோள்கள், நெற்றி, தலை, மார்பு, இவைகளில் தரிக்கிறார்கள் என்று சொல்லுகிறது 'அக்நே' என்றாரம்பிக்கும் வாக்யம். ஸ்ம்ருதிகளிலும் இந்த அர்த்தம் ப்ரகாசமாகப் போகிறது. இப்படி ஶிஷ்டர்களுடைய அநுஷ்டானத்தைக் காண்பிவித்துக் கொண்டு அதன் வழியாக அவஶ்யம் சங்கசக்ரதாரணம் செய்ய வேண்டியது என்கிற விதியில் இந்த மந்திரத்திற்குத் தாத்பர்யம். அதாவது ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தைத் தாண்ட வேண்டும் என்கிற ஆசை உடையவன் பகவானுடைய அடையாளங்களாகிய சக்ரம் முதலியவைகளைத் தோள் முதலிய இடங்களில் தரிக்க வேண்டும் என்று விதிவாக்யத்திற்குத் தாத்பர்யம். அப்படியே யஜுர்வேதத்தில் 'நிவிக்ஷேவ' என்றாரம்பிக்கும் வாக்யம் சொல்லப்படுகிறது. அதனுடைய அர்த்தம் இப்படி—உயெய்ய ஸாஹ⁻ம் - கைகளின் நடுவில், 'பார மத்ய என்னும் பதங்கள் ஆறும் வேற்றுமையுள்ள பதங்களோடு சேரும்' என்று சொல்லி இருப்பதினால் இங்கு ஸமாஸம் சொல்லப்படுகிறது. அதில் 'ஸாஹ⁻ம்' என்று சொல்லியிருப்பது வேதமாகையினால் யுக்தமாகிறது. 'ஸாஹ⁻ம்' என்பது தனிப்பதாகவும் இருக்கலாம். அப்பொழுது இரண்டாம்வேற்றுமைக்கு ஆறும்வேற்றுமையின் அர்த்தம் சொல்லவேண்டும், வேதத்தில் வேற்றுமைகள் மாறுபாடாகச் சொல்லலாமென்று வ்யாகரணத்தில் சொல்லப்பட்டிருப்பதினால். மற்ற வேத வாக்யங்களில் சொல்லப்பட்ட



ஶிஷ்டகாஸ் | ஶ்ரு⁻த்யஜாரஸிலஹ⁻ஜஶிவரஉய்ய விவக்ஷ
வெதெத்யகெ | அக்நே து⁻ வக்ஷஸ்யெவ ஸாஹ⁻உய்யகவ்ரு
ஸிஷிவ்ருகஷுாஸ் தஉயுவரசெவ ச அயொரவி விகல்பத:
ஸஉ⁻த்யயதொ வா ஸ⁻ஹஶுநயாரணஸ்யாநசெவ விரொயா
ஹாவாஸ், தயா ச கெஶ்ஸ்ரிந்ஹாத்ஹிரநா⁻ஷ்டாநஹஶுநாஸ்
ஸாஹ⁻உய்யஶஷ்ஷந வக்ஷ ஏவ வ்யவஹிஶ்யத இத்யாஹ⁻: |
ய:வ்ராஷீநாந⁻ஷாதா ஸாஹ⁻உயெய், விஷ்ணுாஶிஹம்-விஷ்ணுார
ஸாயாரணஹிஹ்நஹம், ஹஸ்ரிதெஜ:-வ்ருஹஉதெதெஜாவிஶிஷ்டம்
ஸ⁻ஹஶுநம், அஹயஸ்—'ஹயயாரணெ' இதி யாதொஷுஜஸம்
வஹ்ரு, ஸஹி ஷ்ராக்தநாந⁻ஷ்டாதா ஹிஷ்ட்யஶாநம் ஸ⁻ஷணம் நிவி
க்ஷேவ-ஸ⁻வ்யக்தம் ஸாயஶாநம் வாவாஹிகம் நிரஸ்தவாநித்ய
யு: | அயவா யொ ஸாஹ⁻உயெய் ஹயாதி ஸஹி நிக்ஷிவெ
ஹிதி வாக்யாயு:—'ஹாஹஸிஷு⁻ஷ⁼ஜுஷ⁼ஜிடு:' இதி ஜிஜயெயுவி

---

தோள்களின் நடுவே இங்கும் சொல்லப்படுகிறது என்று சிலர் சொல்லுகிறார்கள். மற்றவர்களோவெனில் 'ஸாஹ⁻உய்யம்' என்கிற பதம் மார்பைச் சொல்லுகிறதென்பதே ப்ரஸித்தமானதாதலால் மார்பையே சொல்லுகிறது, அப்படி இருந்தபோதிலும் இரண்டிடங்களில் எதிலேயாவது ஒன்றிலே தரிக்கவேண்டும் என்றும், இரண்டிடத்திலும் தரிக்கவேண்டும் என்றும் சொல்லுவதில் ஒருவித விரோதமுமில்லாமையினாலே அப்படியே சில மஹாத்மாக்களினால் அநுஷ்டிக்கப்படுவதைக் கண்டிருப்பதினால் இங்கும் 'ஸாஹ⁻உய்ய' என்பது மார்பையே சொல்லுகிறது என்று சொல்லுகிறார்கள். பழையதான வழக்கத்தை அநுஷ்டிக்கிற எவன் கைகளின் நடுவில் விஷ்ணுாஶிஹம் - விஷ்ணுவிற்கு அஸாதாரணமான சின்னமாகிய இந்த, ஹஸ்ரிதெஜ: - அதிக தேஜஸ்ஸையுடைய சக்ரத்தை, அஹயஸ் - தரித்துக்கொண்டானோ, 'ஹய' என்கிற தாது தரிப்பதைச் சொல்லுகிறது என்று சொல்லப்பட்ட தாதுவின்மேல் லங் ப்ரத்யயத்தை உடையது இந்தப் பதம். அப்படிப்பட்ட பழைய வழக்கத்தை அநுஷ்டிக்கிறவன், ஹிஷ்ட்யஶாநம் ஸ⁻ஷணம் நிவிக்ஷேவ - நன்றாக ப்ரகாசமாக இருந்து பீடை செய்கிற பாபம் முதலியவைகளைப் போக்கடித்துவிட்டான் என்றர்த்தம், அன்றிக்கே எவன் கைளின் நடுவில் சக்ராதிகளைத் தரிக்கிறானோ அவனல்லவோ பாபத்தை நிராகரிப்பான் என்றர்த்தமாகவுமாம், 'வேதத்தில் லுங், லங், லிங், லிட் இவைகள் மாறிவரும்' என்று சொல்லி இருப்பதினாலே லிங்கின் அர்த்தத்தில் லுங் விதிக்கப்பட்டிருக்கிறபடியினால். அதுவுமல்லாமல் பழைய காலத்தில் இருக்கிற

ஶஸ்த்ராணி விஹாய | அதவா ப்ராசீநோऽநுஷ்டாதா பரா யுதைர்பேத்யாநாம் ஸோடும் ஸஹநீயாநாமாயுதவிஶேஷாணாம் நிக்ஷேப-பரித்யக்தவாந் | தைரப்ரதிஹந்யமாநம் ஸுதர்ஶநம் பாஹ்வோர் மத்யே பரிக்ருஹீதவாநித்யர்த்த: | ரக்ஷணாஸமர்த்தம் பரித்யஜ்ய ரக்ஷணஸமர்த்தம் க்ருஹீதவாநித்யுக்தம் பவதி | கிஞ்ச ஸ ஏவ ஸுதர்ஶநதாரீ த்ருதம் வா ஸுதர்ஶநம் திவா நக்தம் ப்ரதர்ஷயதி - ப்ரதர்ஷணயா ச ஸாமர்த்யாத் ப்ரதிபடாந் பாஹ்யாநாப்யந்தராநித்யத்ராஹரணீயம் | யத்வா யத் திவா நக்தம் ஹேதிதேஜஸ்த்வாத் பராந் ப்ரதர்ஷயதி தத் ஸுதர்ஶநமித்யந்வய: | ஹேதி தேஜஸ்த்வம் நாமோபேக்ஷதா, பராபிபவநஸாமர்த்யம் வா | யத்வா விக்ரஹகதம் தேஜோ விவக்ஷிதம் | ததஶ்ச ஸுதர்ஶநஸ்ய துர்தர்ஶநத்வம் சாஸ்த்ரஸித்தமிதி ஜ்ஞாபிதம் | உக்தம் ச ஶ்ரீபௌஷ்கரே சக்ராப்ஜாத்யாயே சக்ரஸ்வரூபலக்ஷணே பகவதைவ —

அனுஷ்டானத்தைச் செய்கிறவன் எதிரிகளின் ஆயுதங்களினால் பிளக்கப் படக்கூடியதாயும் பொறுத்துக்கொள்ளக் கூடியவைகளாயும் இருக்கிற ஆயுதவிசேஷங்களை விட்டுவிட்டான், அந்த ஆயுதங்களினால் தடுக்கப்படாததான சக்ரத்தைக் கைகளின் நடுவில் தரித்தான், அதாவது ரக்ஷிப்பதற்கு சக்தி இல்லாதவைகளை விட்டுவிட்டு சக்தி உள்ள ஆயுதங்களை அங்கீகரித்தான் என்று சொல்லப்பட்டதாயிற்று. மேலும் அப்படிச் சக்ரத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற அந்தப் புருஷன், அல்லது புருஷனால் தரிக்கப் பட்ட அந்த சக்ரம் மத்யாஹ்னம் ராத்திரி எந்தக் காலத்திலும், **ப்ரதர்ஷயதி** - அவர்களை அவமானம் செய்கிறான். இந்தப் பதத்தின் ஸாமர்த்தியத்தினால் வெளியிலும் உள்ளிலும் இருக்கும் சத்ருக்களை என்று சேர்த்துக் கொள்ளவேண்டும். அன்றிக்கே எந்த சக்ரம் மத்யாஹ்னம் ராத்திரி எப்பொழுதும் அதிக தேஜஸ்ஸை உடையதாகையினால் சத்ருக்களை அவமானம் செய்கிறதோ அப்படிப்பட்ட ஸுதர்ஶநத்தை என்று அந்வயம் சொல்லிக்கொள்ளவுமாம். **'ஹேதிதேஜா:'** என்று சொல்லப்படுகிற தேஜஸ்ஸாவது வேறொரு ஒத்தாசையையும் எதிர் பாராதிருக்கை. சத்ருக்களை அவமானம் செய்யும் ஸாமர்த்தியமாகவுமாம். அன்றிக்கே திருமேனியில் இருக்கும் காந்தி சொல்லப்பட்டதாகவுமாம். அத்தால் இவருக்கு ஆஶ்ரிதர்களினால் ஸுலபமாகப் பார்க்கக்கூடிய தன்மை இருப்பதைப்போல எதிரிகளினால் பார்க்கக்கூடாமல் இருக்கையும் உண்டென்று தெரிவிக்கப்பட்டது. இது ஸ்ரீ பௌஷ்கரஸம்ஹிதையில் சங்க சக்ரத்தைப் பற்றிச்சொல்லும் அத்யாயத்தில், சக்ரத்தின் ஸ்வரூபத்தை நிரூபிக்கும் இடத்



'ப்ரஹ்மருத்ரேந்த்ரமுக்யாநாம் தேவாநாம் சக்ஷும்ஷி யஸ்ய ச | அபஹ்ருத்யாந்தி தூராச்சாபி நிரீக்ஷணாத் || தேநேதம் ஸாபி விக்யாதம் நாம்நா துர்தர்ஶநம் த்விஜ | ப்ரணதாநாம் ச பக்தாநாம் யஸ்மாத் ஸுதர்ஶநம் ஸதா || ததாதி தர்ஶநம் தேஷாம் ஸ்ம்ருதம் தஸ்மாத் ஸுதர்ஶநம் |' — இதி | உக்தம் சாஹிர்புத்ந்யேந — 'ஸ்வதேஜஸா ஜகத்ஸர்வம் வ்யாப்ய ஸம்ஸ்திதம் மஹாபலம் | உத்யத்ஸூர்யாயுதப்ரக்யம் ப்ரதீப்தம் விக்யாதவைபவம் ||' — இத்யாதி | ஏவம் ஶ்ரீவிஷ்ணுதர்மே — 'ஸஹஸ்ரமிவ ஸூர்யாணாம்' இத்யாதிகமபி த்ரஷ்டவ்யம் | ஏவம் ஸுதர்ஶநதாரணஸ்ய விரோதிநிரஸநோபாயத்வாத் ததபேக்ஷிணஸ்தத்தாரயேயு:, அந்யதா ஜநநமாத்ரா: ஸம்ஸாரஶீலிநோ பவந்தீத்யபிப்ராயேணாஹ — 'விஹீநாஸ்ஸஜ்ஜநாஸ:' இதி | ஜநாஸ: — ஜநா:, 'ஆஜ்ஜஸேரஸுக்' இதி ஶாந்தஸோऽஸுக் | திவா நக்தம்

தில் 'ப்ருஹ்மாருத்திரன் இந்திரன் முதலிய தேவதைகளினுடைய கண்களையெல்லாம் வெகு தூரத்தில் இருந்து பார்த்தாலும் அபஹரிக்கக் கூடியதான காந்தியின் ஸமூஹம் எப்படிப்பட்டதோ, அதினாலே இது பூலோகத்தில் துர்தர்ஶநம் என்கிற பெயரால் ப்ரஸித்தி அடைந்திருக்கிறது. தன்னை அடைந்தவர்களாகிய பக்தர்களுக்கு எப்பொழுதும் தன்னுடைய தர்ஶநத்தைக் கொடுக்கிறதோ ஆதலால் ஸுதர்ஶந என்றும் சொல்லப்பட்டிருக்கிறது' என்று பகவானாலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அஹிர் புத்ன்யனாலும் 'தன்னுடைய காந்தியினால் உலகம் எல்லாவற்றையும் நிறைத்துக்கொண்டிருப்பவராயும் மிகுந்த பலமுடையவராயும் ஒரே காலத்தில் உதயம் செய்திருக்கிற அனேகம் ஸூர்யர்களுடைய காந்திபோல ப்ரஸித்தமான காந்தியை யுடையவராயும் இருக்கிற' என்றிவை முதலாகச் சொல்லப்பட்டது. இப்படியே விஷ்ணு தர்மத்திலும் 'ஸூர்யர்களுடைய ஆயிரத்தைப் போல் இருக்கிறது' என்றிவைமுதலாகச் சொல்லப்பட்டிருப்பதும் நினைக்கத் தக்கது. இப்படி சக்ரத்தைத் தரிப்பது விரோதிகளை நிராகரிப்பதற்குக் காரணமாகையினால் அப்படி விரோதிகளைப் போக்கடித்துக் கொள்ளவேண்டும் என்று ஆசை உடையவர்கள் அதைத் தரித்துக்கொள்ளக் கடவர்கள், மற்றவர்கள் ஜன்மத்தை அடைந்து ஸம்ஸாரத்தில் உழலுகிறார்கள் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறது—'விஹீநாஸ்ஸஜ்ஜநாஸ:' என்று. **ஜநாஸ:** - ஜனங்கள், ஶ்ருதியில் ஸுக் என்னும் ப்ரத்யயம் வரும் என்று சொல்லி இருப்பதினால் **ஜநா:** என்பதற்குப் பதிலாக **'ஜநாஸ:'** என்று சொல்லி இருக்கிறது. மத்யாஹ்னமும் ராத்திரியும் எப்பொழுதும் தரிக்க வேண்டும் என்றும் அந்வயித்துக் கொள்ளலாம். இது அடையாளமாகை

பிப்ருயாதிதி வாச்ய: | அங்கநாசக்ராதிலிங்கம் ஸதா வஹே யாதித்யர்த்தம் பவதி | 'ஸ்வசக்ராங்கம் க்ருதஶஸ்த்ராதி யஸ்ஸதாவக்ஷ ப்ருத்வீரேண | ஸம்ப்ரதாயிகோ நிரவத்ய: ஸர்வேஷாம் ஸாசார்யகாதி தேக: ||' இதி ஶ்ரீஸாத்வத வசநேப்யத்ர விஷய: | தத்தத்விஷ்ட ப்ராப்தித்தத்த அநிஷ்ட நிவ்ருத்திகாமா: ஸதா ஸுதர்ஶநம் பிப்ருயா ரித்யர்த்த: | ததா ருக்ஸாமவேதம் வாக்யம் — 'அதோ விஷ்ணோர் ...' இத்யாதி| அஸ்யார்த்த: — ஊர்த்வ: - பகவத்விபூத்யேகதேஶ:, ஶ்யேந: - ஶ்யேந ஜாதீய: பக்ஷீ வைநதேய இத்யர்த்த:| வைநதேயஸ்ய கர்மாயத்தாவதாரத்வம் கர்ம வஶ்யத்வாபிப்ராயக்ருதம் | யத்வா அந்யோ ஶ்யேந ஜாதீய: பக்ஷீ விவக்ஷித: | காம் விந்ததீதி கோவிந்த: | கோஶப்தேந பூம்யாதயோ விவக்ஷிதா: - 'கவாதிஷு விதே: ஸஞ்ஜ்ஞாயாம்' இதி ஶ: | ஆயுதஸ்யாந் த்ருஜஷ்ணவ: ஶ்ரீவத்ஸா வா | தஸ்யாயுதாநி பிப்ருதா, அங்கநாசிஹ்நேந ஸாவகாஶிக

---

யினால் தன்னை விட்டுப் பிரியாமல் எப்பொழுதும் தரிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டதாகிறது. 'தன்னுடைய முத்ரைகளினால் அலங்கரிக்கப் பட்டவனும், சக்ரத்தைத் தரித்துக்கொண்டவனும் எவன் இருப்பானோ அவனே வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் இருக்கிற எல்லோராலும் ஆசார்யனாக வைக்கத்தக்கவன்' என்று ஸாத்வத ஶாஸ்திரத்தில் சொல்லி இருக்கிற வசனமும் இந்த அர்த்தத்தையே சொல்லுகிறது. அதாவது அந்தந்த இஷ்டங்களை அடைவதிலும் அந்தந்த அநிஷ்டங்களை நிவ்ருத்தி செய்வதிலும் ஆசையையுடையவர்கள் எப்பொழுதும் சக்ரத்தைத்தரிக்கவேண்டும் என்றர்த்தம். அப்படியே 'அதோ விஷ்ணோ:' என்றாரம்பிக்கும் வாக்யமும் ருக்வேதத்திலும் ஸாம வேதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதின் அர்த்தமாவது — ஊர்த்வ:-பகவானுடைய விபூதியில் ஏக தேசமான, ஶ்யேந:—பருந்தின் ஜாதியில்பிறந்த, (கருடன் என்றர்த்தம்), கருடனுக்குக் கர்மத்தினால் இந்த ஸ்தானம் கிடைத்திருக்கிறது என்று சொல்லி இருப்பதும் (அவதாரதசையில்) அவர் கர்மங்களுக்கு வசப்பட்டவராக அபிநயம் செய்துகொண்டதைக் காரணமாக உடையது. அன்றிக்கே பருந்தின் ஜாதியில் பிறந்த மற்றொரு பக்ஷியாகவுமாம். காம் விந்ததி- அடைகிறார். ஆதலால் கோவிந்தன் என்னப்படுகிறார். இங்கு 'காம்' என்னும் பதத்தினால் பூமி வாக்கு, முதலிய அர்த்தங்கள் சொல்லப்படுகின்றன. கோ என்கிற பதத்தின் பேரில் 'வித்' என்கிற தாது சேர்ந்தால் ஶப்ரத்யயம் வரும் என்று சொல்லியிருக்கிறது. வேதமார்கையினால் ருகாராந்தஶப்தமாக முடிந்தது. அந்தப் பகவானுடைய ஆயுதங்களைப் பரித்துக்கொண்டு அதாவது அடையாளமாக எப்பொழுதும்

186736

ஸ்ரீ:

## பதின்மூன்ருவது வார்ஷிக மஹாஸங்கத்தின்

## வரவு செலவு கணக்கு.

வரவுகள்.

| | | | |
|---|---|---|---|
| Collected by R. Srinivasa Raghava Ayyangar, | | | |
| December 1923. | | | |
| 4. Mr. B. R. Krishnasami Ayyangar, Egmore. | 3 | 0 | 0 |
| 10. Mr C. V. Krishnaswami Ayyangar, Station Master Kurnool. | 5 | 0 | 0 |
| 11. Dewan Bahadur. T. Namberumal Chettiar, Chetpet. | 50 | 0 | 0 |
| 14. Mr. V. Rajagopalachariar, Coral Merchant Street Madras. | 25 | 0 | 0 |
| 16. Mr. T. Krishnasawami Ayyangar, Police Inspector, Puliyangudi. | 2 | 0 | 0 |
| Mr. K. Govindachariar, of Messrs Best & Co., | 15 | 0 | 0 |
| 17. Mr. Bhashyam Naidu, of Appah & Co., | 5 | 0 | 0 |
| 18. Mr. S. Varadachariar H. C. Vakil, Mylapore. | 25 | 0 | 0 |
| 21. Mr M. Doraiswami Ayyangar, China Bazaar Road. | 10 | 0 | 0 |
| Messrs. V. Perumal Chetti & Co., | 100 | 0 | 0 |
| 23. Mr. Sami Venkatachalam Chetti, Madras. | 10 | 0 | 0 |
| Mr. V. S. Govindachariar Vakil, Purasawalkam. | 5 | 0 | 0 |
| 24. Mr. S. Rajagopalachariar, Mannargudi. | 15 | 0 | 0 |
| 25. Messrs. P. Rangiah Chetti & Sons. | 20 | 0 | 0 |
| Mr. C. K. Raghunathachariar Chettipunyam. | 2 | 0 | 0 |
| 26. Messrs. Ummidi Ramiah Chetti & Co, | 10 | 0 | 0 |
| Messrs. Krishna & Co. | 5 | 0 | 0 |
| Pappu Chetti Raghava Chetti Charities | 50 | 0 | 0 |
| 27. His Holiness Sri Mahant of Tirupati. | 100 | 0 | 0 |
| Januvary 1924. | | | |
| 26. Mr. V. V. Srinivasa Ayyangar Vakil, Park Town. | 17 | 0 | 0 |
| Collected by Mr. S. Gopalasami Ayyangar, Mylapore. | | | |
| December 20. Mr. K. Aravamudha Ayyangar Vakil Mylapore | 5 | 0 | 0 |
| 22. Mr. K. S. Krishnaswami Ayyangar, Vakil Mylapore. | 10 | 0 | 0 |
| Mr. N. Rajagopalachariar, Vaikl, Mylapore. | 5 | 0 | 0 |
| 24. Mr. T. Kodanda Rama Ayyangar, Vakil, Tanjore. | 10 | 0 | 0 |
| 25. Mr. K. V. Seshachariar Avl, Mylapore. | 5 | 0 | 0 |
| Januvary 1924. 10. Mr. A. Rangasami Ayyangar, Mylapore. | 25 | 0 | 0 |
| Collected Mr. N. Srinivasachariar. | | | |
| December 30. Mr. M.O. Parthasarathy Ayyangar, Triplicane | 10 | 0 | 0 |
| Collected by Mr. Venkatachariar, Clerk, Ramanujakutam. | | | |
| December 26. Mr. T. Nagayyachettiar, Govindappa NaickanStreet | 25 | 0 | 0 |
| Collected by. Mr. Ramanuja Ayyangar | | | |
| Small collections from Triplicane. | 7 | 0 | 0 |
| April 1924. Collected by Mr. Bhashyam Ayyangar. | 20 | 0 | 0 |
| Total | 596 | 0 | 0 |

செலவுகள்.

| | | | |
|---|---|---|---|
| Vidvat Sambhavana. | 322 | 0 | 0 |
| Travelling allowance to Pandits. | 72 | 8 | 0 |
| Postage Charges. | 16 | 11 | 0 |
| Cost of paper. | 27 | 14 | 0 |
| Printing Charges. | 17 | 13 | 0 |
| Feeding and other expenses. | 114 | 4 | 6 |
| Balance on hand. | 24 | 13 | 6 |
| Total | 596 | 0 | 0 |

R. Srinivasa Raghava ayyangar.

Secretary

## ப்ராம்மணன் (The Brahmin.)

Foolscap sizeல் 8-பக்கமடங்கிய இம்மாதாந்த இங்கிலீஷ் பத்ரிகை, தங்கள் நிலைமையிலிருந்து தாழ்ந்த ஸ்திதிக்கு வந்திருக்கும் ப்ராம்மணர்களைச் சீர்திருத்துவதற்காகவே ஸ்ரீ உ. வே. துவார் R. ஜகந்நாதாசாரியரால் திருவல்லிக்கேணியில் ப்ரசுரம் செய்யப்பட்டுவருகிறது. இதை வட இந்தியாவில் பலர் அபிமானிக்கிறார்கள் என்று கேட்டு ஸந்தோஷிக்கிறோம். இதுபோலவே நம்ம தேசத்தாரும் அபிமானிப்பார்கள் என்று நம்புகிறோம். இதில் அநேக அருமையான விஷயங்கள் வெளிவருகின்றன. வருஷ சந்தா ரூ. 1—8—0 தான்.

காரியதர்சி.

## மும்மணிக்கோவை.

இது ஸ்ரீ தேவநாதனுடைய திவ்ய வடிவழகில் ஈடுபட்ட ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனால் அநுக்ரஹிக்கப்பட்ட த்ரமிட ஸ்ரீ ஸூக்தி; இது செவிக்கினிய செஞ்சொல்லாயிருக்கும் தன்மையை எடுத்துக்காட்டுகிற ஸ்ரீ உ. வே பகவத்விஷயம் - பண்டிதபூஷணம் - சேட்டலூர் நரஸிம்மாசார்ய ஸ்வாமியால் செய்யப்பட்ட வ்யாக்யாநத்துடன் கூடினது. இதன் விலை அணு 8. வேண்டுவோர், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை காரியதர்சிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

காரியதர்சி.

## ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, வெண்ணாற்றங்கரை.

நாளது சித்திரைமீ 1ல ஸ்ரீ உ. வே. N. ராமஸ்வாமி அய்யங்காரின் முயற்சியால் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்மன் ஸந்நிதியில் அநேக ஸ்ரீ வைஷ்ணவர்கள் கூடினார்கள். ஸ்ரீ உ. வே. வேலாமூர் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி ஸ்ரீராமஜனனத்தைப்பற்றி வெகு உருக்கமாய் உபந்யாஸம் செய்தார். பிறகு, புதுப் பஞ்சாங்கம் வாசித்து, ப்ரஸாதவிநியோக மானவுடன் ஸபை கலைந்தது.

வெண்ணாற்றங்கரை.
16—4—24.

N. ரங்காசாரியன், மெம்பர்.

Published by the Secretary, Sri Vaishnava Siddanta Sabha,
Purasawalkam, Madras.